DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals 416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc. "My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6


TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1407 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday March 24, 2023

# More than two Prominent Black Leaders in Toronto Mayoral Race

# ரோறன்ரோ மாநகர மேயர் தேர்தலில் இரண்டுக்கு மேற்பட்ட கறுப்பினத் தலைவர்கள் போட்டியிடுவதாக எதிர்பார்க்கப்படுகிறது

ரோறன்ரோ மாநகர சபையின் முன்னாள் மேயர் ஜோர் ரோறியின் இராஜினாமாவைத் தொடர்ந்து அறிவிக்கப்படவுள்ள மேயர் தேர்தலில் போட்டியிடுவதற்கு நாலா பக்கங்களிலிருந்து பல வேட்பாளர்கள் தங்களைத் தயார் செய்து கொண்டிருப்பதாக அறிவித்துள்ள நிலையில் ரொறன்ரோ கறுப்பின சமூகத்தின் சார்பில் மேயர் தேர்தலில் இரண்டு மேற்பட்ட கறுப்பினத் தலைவர்கள் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்கள். அவர்களில் இருவர் பெயர்கள் தற்போது செய்திகளில் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. ரொறன்ரோ மாநகர காவல்துறையின் முன்னாள் தலைமை அதிகாரியான மார் சவுண்டர்ஸ் மற்றும் தற்போதைய ஸ்கா-புறோ கில்வுட் தொகுதி மாகாண சபை உறுப்பினர் மிட்சி ஹண்டர் ஆகியோர் தங்கள் கறுப்பினம் சார்ந்த நிறுவனங்களிலிருந்து தங்கள் பிரச்சாரங்களை ஆரம்பித்துள்ளதாக அறியப்படுகின்றது. அத்துடன் தாங்களும் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளவர்களில் முக்கியமானவராக கருதப்படுகின்றவர்களில் முன்னாள் மாநகர உறுப்பினராக சுமார் 12 வருடங்கள் கடமையாற்றியவரும் பிரதி மேயராக இரண்டு வருடங்கள் கடமையாற்றியவருமான அன்னா





பெயிலோ அவர்களும் தங்கள் பிரச்சாரப் பணிகளை ஆதரவாளர்கள் மத்தியில் ஆரம்பித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க கடந்த செவ்வாயன்று கறுப்பின மக்கள் சார்ந்த முக்கிய அமைப்பு ஒன்றில் உரையாற்றிய மிட்சி ஹண்டர்:

“மூடப்பட்ட பொது கழிப்பறைகள் முதல் போக்குவரத்தில் வன்முறை அதிகரிப்பு வரை நகர சேவைகளின் நிலை குறித்த குடியிருப்பாளர்களின் கவலைலகளை மேற்கோள் காட்டிய மிட்சி ஹண்டர் நான் போட்டியிடுவதற்கு ”இது நகரத்திற்கு ஒரு முக்கியமான தருணம்” என்றும் தெரிவித்துள்ளாராம்.

## மீண்டும் தன் இனிய பாடல்கள் மூலம் ரொறன்ரோ இசை ரசிகர்களை மகிழ்விக்க வந்துள்ளார் பாடகர் வி. என். மகாலிங்கம்

ஸ்காபுறோவில் சேவையாற்றும் **FRONTLINE COMMUNITY CENTRE** அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் சனி ஞாயிறு (25ம் 26ம் திகதிகளில்) இரண்டு நாட்களும் **MARKHAM FAIR GROUNDS INDOOR** மண்டபத்தில் நடைபெறவுள்ள **HONORING OUR HEROS** விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகளோடு மெல்லிசை நிகழ்ச்சியும் இடபெறுகின்றது.



செவ்வாய்க்கிழமை மாலை ரொரன்ரொ பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கிய அவரை நிகழ்ச்சி ஏற்பாட்டாளரும் **FRONTLINE COMMUNITY CENTRE** அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான திருமதி விஜயா குலா உட்பட நண்பர்கள் ஊடகவியலாளர்கள் வரவேற்பதை இங்குள்ள படத்தில் காணலாம். அனுமதி இலவசம்!

(உள்ளே 2ம் பக்கத்தில் விளம்பரம்)

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI



HONOURING OUR HEROES
A COVID-19 COMMEMORATION CONCERT & FAIR!
பல்சுவை கலை நிகழ்வு!
Hosted by
FRONTLINE
COMMUNITY CENTRE
March 25th & 26th, 2023
10 am - 10 pm
MARKHAM FAIRGROUNDS
10801 McCowan Rd, Markham, ON L3P 3J3
அனுமதி இலவசம்!
Media Partner
east FM 102.7
Mathusha Menon
Jessica Judes
Rock Star V. M. Mahalingam
Sinmaye Sivakumar
Prabha Balakrishnan
Sutrapi Yohanathan
Thass Sivapathasuntharam
Sabaratnam Sabaeshkumar
Nitshika Suvaminathan
Sivasundaram Muralitharan
Anesha Loganathan
Rishi Sri
I, The Mountain
Rose Jones
Basement Reels
Wayne Madder
BoardTree
பேரிடர்க்கால அதியுயர் சேவையாளர் மதிப்பளிப்பு!
உள்ளூர் கலைஞர்களின் திரையிசை ஆடல்கள், யோகா,
வில்லுப்பாட்டு, நகைச்சுவை கதம்பம், வணிக உணவு சாவடிகள்!
MUSIC ACCOMPANIMENT BY
RA Rhythms
SEVENOTES
FRONTLINE COMMUNITY CENTRE
3031 Markham Rd, Unit #27,
Scarborough, ON M1X 1L9
events@fcccanada.org
www.fcccanada.org
416-840-4425
Funded by the Government of Canada
Canada
KALAVIYAM VOICE ACADEMY
AERO COURIER
Fast & Secure World Wide Service
Nallur Kumaran Inc.
yugam radio
SAI'S BOUTIQUE
STYLE CINE DANCE COMPANY
SAI SWARALAYA
NILA SURIYAH
Mary's Bridal Creation
Sapphire Banquet & Catering
SHIVA
(647) 406-4866
(123) 325-4569
Laxy Fancy
J SAREES
KAILASA CANADA
SUTHARSAN SELLAR
PRIMA DANCE SCHOOL
pchs
Leading With Conviction And Courage
Mama & Mami's KITCHEN
உதயன்
TNO
THE NEIGHBOURHOOD ORGANIZATION
WORLD PARKINSON'S PROGRAM
Canadian Blood Services
BLOOD PLASMA STEM CELLS ORGANS & TISSUES
Hearing Solutions

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# ஐ.எம்.எவ் கடன் மூலம் நாட்டின் சுமையை அதிகரித்த ரணில் அரச நிறுவனங்களை விற்க பேரம் பேசி வருகின்றார்?

ஐ.எம்.எவ் எனப்படும் சர்வதேச நாணய நிதியத்திடம் பாரிய கடன் பெற்று நாட்டின் சுமையை அதிகரித்துள்ள பெயருக்கு ஜனாதிபதியாகவும் உலக முதலாளித்துவத்தின் தரகராகவும் உள்ள ரணில் விக்கிரமசிங்க தற்போது தனது உண்மையான முகத்தைக் காட்டத் தொடங்கியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. அவற்றுள்ள இலங்கை அரசிற்கும் மக்களுக்கும் பெரும் சொத்துக்களாக உள்ள பல அரச நிறுவனங்களை விற்பதற்காக பேரம் பேசி வருகின்றார் என்ற செய்தியும் இணைந்து வந்துள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பை கிடைத்தது தொடர்பாக கொழும்பில் பட்டாசு கொளுத்தி சாதாரண மக்கள் அதைக் கொண்டாடியதாக செய்தியாளர்கள் அறிவித்துள்ளார்கள். அவர்கள் இன்னும் சில மாதங்களில் கூட ஒரு வேளை உணவிற்கு கூட தவிக்கும் நிலை வரலாம் என்றும் பொருளா-தார வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் முதலாளிகளோ அன்றி அன்றி அரசியல் தலைவர்களோடு எந்தக் காலத்திலும் கஸ்டங்களை அனுபவிக்க மாட்டார்கள். நாட்டில் பொருளாதார இடர்கள் ஏற்படும் போது தான் அவர்களின் வணிக இலாபங்கள் அதிகரிக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இலங்கை அரசிற்கு சர்வ தேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்தது ப்றறி பலரும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டுள்ளனர். “இந்த கடன் பெற்ற விடயத்தை நாம் கொண்டாட முடியாது .எமக்கான முழுமையான விடியலாக கருதி விடவும் கூடாது” என்று இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மூச்சு விடுவதற்கான சந்தர்ப்பமாகவே இது. என்றும் அவர் தெரிவித்துள்ளார் நாம் இதனை எவ்வாறு எடுத்துக் கொள்ளவேண்டும் என நன்கு யோசித்து முடிவெடுக்க வேண்டும் என அவர் சபையில் தெரிவித்தார்.
இதேவேளை இலங்கை அரசிற்கு சொந்தமான பல நிறுவனங்களை விற்பதற்கு அல்லது அவற்றின் பங்குகளை வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு விற்பதற்கு தற்காலிக ஜனாதிபதி தனது அமைச்சர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அரச நிறுவனங்களின் பட்டியலில் ஸ்ரீலங்கன் விமான சேவை மற்றும் அரச தொலைத் தொடர்பு திணைக்களம் மற்றும் ஹோட்டல் கூட்டுத்தாபனம் உட்பட இருபத்தைக்கும் மேற்பட்ட நிறுவனங்களின் பட்டியல் வெளியாகியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஆனால். இலங்கையில் அதிக எண்ணிக்கையில் வாழும் ஏழை மக்கள் இதனை அறியாது இருக்கையில் நாட்டை உலக முதலாளிகளின் கூடாரமாக மாற்றும் முயற்சிகளில் இலங்கையில் உள்ள அவர்களின் ‘கைக்கூலிகள்’ முயன்று வருவதை நாம் காணத் தொடங்கியுள்ளோம் என்பதையும் தற்போது தொடக்கம் அவதானிக்கலாம்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன் படிக்கை தொடர்பில் அதிபர் ஆற்றிய விசேடஉரை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

(பின்பக்கத் தொடர்ச்சி)

# “காசு இல்ல கடன் தான் இருக்கு” என்று கைவிரித்த தமிழ்நாட்டு நிதியமைச்சர் தியாகராஜன்

ஒரு மாதம் கூட்டத் தொடர் நடப்பதால், யார் யார் பேசுவது, எதிர்க்கட்சிகள் பிரச்னை எழுப்பினால், எவ்வாறு நடந்து கொள்வது என்பது குறித்து, முதல்வர் ஸ்டாலினும், மூத்த அமைச்சர்களும் ஆலோசனைகள் வழங்கியுள்ளனர். கூட்டத்தில் பேசிய எம்.எல்.ஏ.,க்கள், “மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையை, அனைத்து குடும்ப தலைவிகளுக்கும் வழங்க வேண்டும்.
இல்லையெனில், பணம் கிடைக்காதவர்கள் தி.மு.க.,வுக்கு ஓட்டளிக்க மாட்டார்கள்.“அதுபோல, சமையல் காஸ் சிலிண்டர் ஒன்றுக்கு 100 ரூபாய் மா-னியம் வழங்க வேண்டும் மக்கள் கேட்கின்றனர்“ என, வலியுறுத்தியுள்ளனர். மேலும் சில எம்.எல்.ஏ.,க்கள், “அரசு துறைகளில் காலியாக உள்ள, 3.5 லட்சம் பணியிடங்கள் நிரப்புவோம் என, தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை படிப்படியாக நிறைவேற்ற வேண்டும். “அங்கன்வாடி, சத்துணவு, போக்குவரத்து, ரே‘ன் கடைகளில் காலியிடங்களை உடனே நிரப்ப வேண்டும். தொகுதிக்கு சென்றால் கட்சியினரும், பொது மக்களும் இதுபற்றியே கேட்கின்றனர்“ என கூறியுள்ளனர். பல எம்.எல்.ஏ.,க்கள், தங்கள் தொகுதி, மாவட்டத்திற்கென பல்வேறு திட்டங்கள், கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை, நிதியமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களிடம் வழங்கியுள்ளனர். மனுக்களை வாங்கிய அமைச்சர்கள், “திட்டங்களை செயல்படுத்த நாங்கள் தயார்.
ஆனால், நிதியமைச்சர் நிதி வழங்க வேண்டுமே...“ என, பதிலளித்துள்ளனர். இதனால் எம்.எல்.ஏ.,க்களின் கோரிக்கைகள், நிதியமைச்சரை நோக்கி திரும்பியுள்ளன.அவர்களுக்கு பதிலளித்து நிதியமைச்சர் தியாகராஜன் கூறியுள்ளதாவது:
வரி வருவாய் அதிகரித்தாலும், தமிழகத்தின் கடன் சுமை அதிகரித்து வருகிறது. நிதி நிலைமையை சரி செய்து, குடும்ப தலைவிகளுக்கு 1,000 ரூபாய் உரிமை தொகை வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளோம். ஏற்கனவே, பல நலத் திட்டங்களுக்கு பல்லாயிரம் கோடி ரூபாய் செலவாகிறது. இனி, அறிவித்த திட்டங்களுக்கு நிதி ஆதாரங்களை உருவாக்குவதுதான் என் பணியாக இருக்கும். அறிவித்த பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதே கடி-னமாக இருக்கும்போது, இப்போதைக்கு புதிய திட்டங்களுக்கு வாய்ப்பு இல்லை. எனவே, சட்டசபையில் புதிய திட்டங்களை கேட்டு, அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்த வேண்டாம். இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

பிற்குறிப்பு: முன்னாள் ஆட்சியில் இருந்தவர்கள் மற்றும் இன்னாள் ஆட்சியில் இருப்பவர்கள் ஆகியோரிடம் தான் அரசில் இருக்க வேண்டிய பணம் இருக்கிறது..- என்று நாம் தமிழர் கட்சியின் சீமான் தெரிவித்துள்ளார்.

**மணமகள் தேவை**

தனியார் IT Freelancer ஆக பணிபுரியும் 34 வயதுடைவரும் 5'6" உயரமுள்ளவருமான (இலங்கை) கொழும்பில் வசிக்கும் கத்தோலிக்க மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.

**தொடர்புகளுக்கு:**
94(77)6034886

**CLEANING வேலைக்கு ஆட்கள் தேவை**

Keele & Hwy 7 பகுதியில் காலை 7.00 தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை cleaning வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண்கள் மட்டுமே. 5 நாட்கள் அல்லது 7 நாட்கள் வேலை செய்யலாம்.

**தொடர்புகளுக்கு: சங்கர்**
(416) 305-0264

**மணமகன் தேவை**

கனடா **Toronto** இல் கணக்காளராக பணியாற்றும் 30 வயதுடைய **5’1”** உயரமுள்ள கத்தோலிக்க பெண்ணுக்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

**தொடர்புகளுக்கு:**
94 (77) 603 4886

**Oshawa வில் தங்கும் இடம் தேவை**

**Oshawa** நகரில் **Durham College** இல் மே மாதம் 2023 முதல் கற்கும் தமிழ் மாணவி அங்கு தங்கும் இடம் தேடுகிறார்.
குடும்பத்துடனோ அல்லது மாணவிகளுடனோ சேர்ந்து இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: அருணா
**1 519 222 5191**

**Handyman Wanted**

Handyman with experience needed for Renovation company in Toronto.
Salary negotiable.

Contact: Thambi
OODAM MAINTENANCE WORK

Call:
(416) 464-1938

**CLEANING STAFF WANTED**

House Cleaning Staff Wanted

Day Shift Only.
(No Evenings Or Weekends)

Call:
(905) 4726042

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் நகர சபையினால் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா திறந்து வைப்பு

- மன்னார் நிருபர்

மன்னார் நகர சபையின் நிதி ஒதுக்கீட்டில் மன்னார் சாவக்கட்டு பகுதியில் அமைக்கப்பட்ட மன்னார் நகர சபை பொது சிறுவர் பூங்கா வெள்ளிக்கிழமை (17) காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் 1.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட குறித்து பொது சிறுவர் பூங்கா வெள்ளிக்கிழமை (17) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் ஆண்டனி டேவிட்சன் தலைமையில் நகர சபையின் செயலாளர் நகர சபையின் உறுப்பினர்கள் மற்றும் நகர சபை பணியாளர்கள் இணைந்து வைபவரீதியாக திறந்து வைத்துள்ளனர்.



மேலும் மன்னார் நகர சபையின் 2022 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மன்னார் பஜார் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட உள்ள “மன்னார் நகர சபை நவீன கட்டடத் தொகுதியின்” வரைபடத்துடன் கூடிய பெயர் பலகை இன்றைய தினம் வைபவ ரீதியாக திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.



மேலும் மனிதநேய சேவையாளரும் மன்னார் மறைமாவட்ட ஆயருமான இறை பாதம் அடைந்த மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களின் ஒரு வருட ஞாபகத்தை முன்னிட்டு மன்னார் நகர சபையினால் 35.45 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வரும் கடைத் தொகுதியின் கல்வெட்டுகள் இன்றைய தினம் நகர சபையின் தலைவர் தலைமையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 3 பெண்களை கழுத்தை நெரித்து படுகொலை செய்த நபர் கைது

எல்பிட்டிய, அவிட்டாவ பிரதேசத்தில் மூன்று பெண்களை கழுத்தை நெரித்து படுகொலை செய்தமை மற்றும் சொத்துக்களை கொள்ளையடித்த வழக்குகள் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எல்பிட்டிய குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யகிரல பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது, திருடப்பட்ட தங்க நெக்லஸ், 03 ஜோடி காதணிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது டன், சந்தேக நபருக்கு எதிராக மத்துகம, களுத்துறை மற்றும் அல்பிட்டி நீதவான் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.



# மன்னார் தீவுப் பகுதியில் காற்றாலை மின்சாரம் அமைக்கும் தொடர்பில் ஆராய கொழும்பில் இருந்து வந்த "சூழலியல் நீதிக்கான மையம்" பிரதிநிதிகள் அடங்கிய குழு

- மன்னார் நிருபர்



மன்னார் தீவுப் பகுதியில் 2ம் கட்ட காற்றாலை மின்சாரம் அமைத்தல் தொடர்பில் தீவுப் பகுதி மக்களின் எதிர்ப்பு நடவடிக்கை அதிகரித்து வரும் நிலையில் காற்றாலை மின்சாரம் தொடர்பில் அரசாங்கத்தினால் சூழலியல் தாக்கல் அறிக்கை (E I A) ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கை தொடர்பில் பொது அமைப்பு மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் அதிருப்தி அடைந்துள்ள நிலையில் குறித்த அறிக்கை தொடர்பில் மக்களின் பாதிப்பு குறித்த உண்மை தன்மை இல்லை என்பதே மக்கள் பிரதிநிதிகளின் கருத்தாக அமைந்துள்ளது.

குறித்த காற்றாலை மின்சாரம் மன்னார் தீவுப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கு பல்வேறு தாக்கத்தை செலுத்தும் என்பதை நோக்கமாகக் கொண்டு தீவுப் பகுதிக்குள் நிறுவுவதை முற்றாக நிறுத்தும்படி கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

குறித்த நடவடிக்கை தொடர்பில் ஆராயும் நோக்கோடு “சூழலியல் நீதிக்கான மையம்” பிரதிநிதிகள் அடங்கிய குழு கொழும்பிலிருந்து மன்னாருக்கு வருகை தந்து திங்கட்கிழமை (20) காலை சுமார் 9 மணி அளவில் OPEnE நிறுவனம் ஒன்றின் மாநாட்டு மண்டபத்தில் மன்னார் மாவட்ட மற்றும் மன்னர் தீவு பகுதி மக்கள் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

குறித்த கலந்துரையாடலில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் ஆராயப்பட்டு மக்களின் விருப்பு வெறுப்புகளை ஆராய்ந்து கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை ஆலோசனைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் தீவு பகுதியில் மேலதிகமாக நிறுவப்படும் காற்றாலை மின்சாரம் பொருத்தும் வேலை திட்டத்தை முற்றாக தடை செய்யும் பல்வேறு காரணங்கள் அடங்கிய கருத்தை கொழும்பிலிருந்து வருகை தந்த குழுவினரிடம் தெரிவித்ததை அடுத்து குறித்த நடவடிக்கைக்காக சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் மக்களிடம் பெறப்பட்ட கருத்துக்கள் ஊடகங்கள் வாயிலாக தெரிவிப்பதுடன் சட்ட நடவடிக்கை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாந்தை உதைபந்தாட்ட லீக்கின் நிர்வாக செயற்பாடுகள் குறித்து அதிருப்தி

- மன்னார் நிருபர்

மடு மாந்தை உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு ற்பட்ட அனைத்து கழகங்களையும் உள்ளடக்கி அனைத்துக் கழகங்களுக்கும் உரிய வாக்குரிமை வழங்கி இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன பிரதி நிதி முன்னிலையில் சரியான ஒரு நிர்வாக தெரிவை நடத்த வேண்டும் என மடு மாந்தை உதைபந்தாட்ட லீக்கின் புதிய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மடு மாந்தை உதைபந்தாட்ட லீக்கின் புதிய தலைவர் எம்.டி. அருண்ராஜ், செயலாளர் யே. ஒகஸ்ரின், பொருளாளர் க. மகேந்திரன் ஆகியோர் இணைந்து திங்கட்கிழமை (20) திங்கட்கிழமை காலை மன்னாரில் ஊடக சந்திப்பை மேற்கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், உண்மையில் விளையாட்டு அமைப்புகள் விளையாட்டு வீரர்களின் திறனை வளர்த்துக் கொள்வதற்கான களத்தை அமைத்துக் கொடுப்பது, அவர்களின் திறமைகளை வெளி உலகிற்கு கொண்டு வருவதற்கான செயல்பாட்டை மேற்கொள்வதற்கான குழுவாகவே காணப்பட வேண்டும்.

ஆனால் தன்னிச்சையான செயல்பாடுகள்,தான் சார்ந்த செயல் பாடுகளை மேற்கொண்டு, விளையாட்டு வீரர்களின் மன நிலையை பாதிப்படையச் செய்கின்ற செயல்பாடாக தற்போது மடு மாந்தை லீக்கில் இடம்பெற்று வருவதாக எண்ணத்தோன்றுகின்றது.



மடு மாந்தை லீக்கின் முந்தைய தலைவர் தன்னிச்சையாக தான் சார்ந்த ஒரு சில குறிப்பாக அவரின் ஊரில் உள்ள இரண்டு கழகமும், அருகில் உள்ள கத்தாளம் பிட்டி கிராமத்தில் இருந்து ஒரு கழகம் உள்ளடங்களாக 3 கழகங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு ஏனைய 14 கழகங்களில் உள்ள விளையாட்டு வீரர்களின் வாழ்க்கையை கேள்விக் குறியாக்கிக் கொண்டு இருக்கின்றனர்.

மடு மாந்தை உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு ற்பட்ட அனைத்து கழகங்களையும் உள்ளடக்கிய அனைத்துக் கழகங்களுக்கும் உரிய வாக்குரிமையை வழங்கி இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன பிரதிநிதி முன்னிலையில் எங்களுக்கான சரியான ஒரு நிர்வாக தெரிவை நடத்த வேண்டும்.

அதற்கான ஒழுங்கை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன நிர்வாகம் ஏற்பாடுகளை மேற்கொண்டு தர வேண்டும்.என அவர்கள் தெரிவித்தனர்.



# மனைவியுடன் தகராறு – வீட்டை எரித்த கணவன்

மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக கணவன் வீட்டிற்கு தீ வைத்த சம்பவம் ஒன்று மொரட்டுவையில் நிகழ்ந்துள்ளது.

மொரட்டுமுல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொல்கொட சிறி மாவத்தை கடலான பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மனைவி மற்றும் இரு குழந்தைகளுடன் உறவினர் வீட்டிற்கு சென்றபோது, கணவன் வீட்டிற்கு தீ வைத்துள்ளார். இந்த சம்பவம் குறித்து மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த தீ விபத்தில் வீட்டில் இருந்த ஏராளமான பொருட்கள் எரிந்து நாசமானதுடன், பாடசாலை செல்லும் இருவரது புத்தகங்களும் தீயில் கருகின.

# வடக்கு கடற்பகுதியை இந்திய மீனவர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதை கண்டித்து மன்னாரில் எதிர்ப்பு போராட்டம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

- மன்னார் நிருபர்



வடக்கு கடல் பகுதியில் வரி அறவீடு செய்து இந்திய மீனவர்களுக்கு வாரத்தில் மூன்று நாட்களுக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பாகவும், இந்திய மீனவர்களின் தொடர்ச்சியாக இலங்கை கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவதை கண்டித்து வடக்கு மாகாண மீனவர்கள் ஒன்றிணைந்து 23ம் திகதி வியாழக்கிழமை காலை மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்க உள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னாரில் திங்கட்கிழமை (20) காலை ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாச செயலாளர் என்.எம்.ஆலம், மன்னார் மாவட்ட கிராமிய சம்மேளனத் தலைவர் ஜஸ்ரின் சொய்சா, மீனவ சமூகம் சார்பாக அன்ரனி சங்கர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில், குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு வர்த்தகர்கள், சிவில் சமூக அமைப்புகள்,தனியார் போக்குவரத்து சங்கங்கள், விவசாயிகள் என அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டுக் குழு சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய மீனவர்களின் வருகையை, இந்திய மீனவர்களுக்கு வரி அறவிட்டு மூன்று தினங்கள் இலங்கை கடற்பரப்பில் தொழில் செய்வதற்கு அனுமதி வழங்குவதை பரிசீலிப்பதாக கடந்த 22-2-2023 அன்று நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் மாவட்டம் மற்றும் வட மாகாணம் தழுவிய மீனவர்களும் மீனவ சமாசங்களும் தங்களுடைய கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

அதற்கு அப்பால் இந்த தீர்மான யோசனையை நாடாளுமன்றத்தில் உடனடியாக நிராகரித்த குறிப்பாக வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரையையும் நாங்கள் வரவேற்கிறோம்.

அதற்கு அப்பால் இந்த விடயத்தை அரசு பரிசினை கூட செய்யாமல் உடனடியாக இதனை கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியும், இலங்கை இந்திய பேச்சு வார்த்தை மீனவர்களின் என்பதை கடந்த 2016 இல் எடுத்துக் கொள்ளப்பட்ட நடைமுறைக்கு இணங்க பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்தி எதிர்வரும் 23ஆம் திகதி இந்த ஆர்ப்பாட்டமானது மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டு மன்னார் மருத்துவ மனையின் பிரதான பாதையூடாக சென்று மன்னார் புதிய பேருந்து நிலையத்தில் இறுதி நிகழ்வுகள் நடைபெற உள்ளது.

இதற்கு அமைவாக வடபகுதியில் இருக்கும் பொது அமைப்புக்கள், மீனவ சங்கங்கள், ஏனைய சிவில் சமூகங்கள் அனைத்தும் எம்மோடு இணைந்து இந்த விடயத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் இது மீனவர்கள் சார்ந்த பிரச்சனைகள் மட்டுமல்ல. வடமாகாணத்தில் வாழ்கின்ற அனைவரின் பிரச்சினையாக இருக்கிறது.

இன்று வட பகுதியில் நடைபெறும் இந்த பிரச்சினை எதிர்காலத்தில் இலங்கை முழுவதையும் அவர்கள் ஆக்கிரமிப்பார்கள் என்பதை இங்கு நாங்கள் பதிவு செய்கிறோம்.

எனவே அன்றைய தினம் அனைவரும் முழுமையாக கடல் தொழிலை நிறுத்தி வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைப்பு தருமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். இதற்கான உத்தியோகபூர்வ கடிதங்களை அந்தந்த அமைப்புகளுக்கும் சங்கங்களுக்கும் நாங்கள் விரைவில் அனுப்ப இருக்கிறோம்.

இதற்கு அப்பால் நாங்கள் ஒன்றைக் கூறுகிறோம். இலங்கை அரசு இந்திய அரசும் தாங்கள் எதிர் காலத்தில் மேற்கொள்ள இருக்கின்ற அபிவிருத்திக்காக நாட்டின் தேசிய வளங்களை யாருக்கும் கையளிப்பதற்கு அனுமதிக்க முடியாது.

அந்த செயல்பாடு மூலம் எமது மீனவ சமூகத்தை வறுமைக் கோட்டிற்குள் தள்ளுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என தெரிவித்தனர்.

# புதிதாக நியமனம் பெற்ற மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் கௌரவிப்பு

(21-03-2023)

மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுள்ள மன்னார் விடத்தல் தீவைச் சேர்ந்த டிலுஷன் பயஸ் அவர்களை கௌரவிக்கும் முகமாக அக்கடமி கராத்தே கழகத்தின் சார்பாக குறித்த கழகத்தின் பிரதம ஆசிரியர் எம்.அன்ரனி இன்பராஜ் தலைமையில் 21-03-2023 அன்று மதியம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து வாழ்த்து மடல் வழங்கினார்.

இதன் போது மன்னார் மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர், மன்னார் மாவட்ட கராத்தே கழகத்தின் செயலாளர், வை.எம்.சி.ஏ.கலை மன்ற இயக்குனர், ஆகியோர் கலந்து கொண்டு புதிதாக பதவியேற்ற உதவி அரசாங்க அதிபருக்கு வாழ்த்து மடல் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.



MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

(பின் பக்கத் தொடர்ச்சி)

# ஈற்றோபிக்கோ நகரில் இயங்கிவரும் 'கிராமத்து வதனம்' அமைப்பினரால் கொண்டாடப்பெற்ற



எழுத்தாளரும் தமிழாசிரியையுமான திருமதி கமலவதனாவின் தலைமையில் ஈற்றோபிக்கோ நகரில் இயங்கிவரும் 'கிராமத்து வதனம்' அமைப்பினரால் கொண்டாடப்பெற்ற 'உலக மகளிர் தினம்-2023 கடந்த 19-03-2023 ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் ஈற்றோபிக்கோ நகரில் அமைந்தள்ள சனசமூக நிலைய மண்டபத்தில் சிறப்பக நடைபெற்றது.

பிரதம விருந்தினராக பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்.

சிறப்பு விருந்தினராக முன்னாள் தமிழ் மூத்தோர் சங்கத்தின் தலைவரும் சமூக சேவையாளருமான கரு நவரட்ணராஜா அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார். நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கும் பணியையும் அங்கு இடம்பெற்ற பட்டிமன்ற நிகழ்ச்சிக்கு நடுவராகப் பணியாற்றியும் சிறப்பாக செய்திருந்தார் பேச்சாளரும். எழுத்தாளரும் வானொலிக் கலைஞருமான ஜொதி ஜெயக்குமார் அவர்கள்.

நடனங்கள் உரைகள் என பல கிராமிய நிகழ்ச்சிகள் அங்கு இடம்பெற்றிருந்தன.

பட்டிமன்றம் மற்றும் நடன நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியவர்களை பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் தனது துணைவியார் சகிதம் கௌரவித்தார்.

சிறப்பு விருந்தினர் கரு நவரட்ணராஜா அவர்கள் தலைவி கமலவதனா அவர்களை பாராளுமன்றம் சார்பான சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார்.


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies
மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches
நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer
மாதவிடாய் சம்பந்தமானவையும் | Menstruation
உடற்பருமன் குறைத்தல் | Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9





Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்



Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

# மாணவர்களை ஏற்றாமல் சென்ற பேருந்துகள் தொடர்பில் செய்தி வெளியிட்ட ஊடகவியலாளருக்கு கொலை அச்சுறுத்தல்

இலங்கை செய்திகள் Sri Lanka News



- மன்னார் நிருபர்

பாடசாலை மாணவர்களை ஏற்றாமல் சென்ற பேருந்துகள் தொடர்பில் செய்தி வெளியிட்ட ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் அவர்களுக்கு மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபை ஊழியர் ஒருவரால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஊடகவியலாளர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பனிக்கன்குளம் மற்றும் கிழவன் குளம் கிராமங்களை சேர்ந்த மாணவர்கள் பாடசாலை வரவும் மீள வீடு திரும்பவும் பேருந்துகள் ஏற்றாமையால் பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் பல்வேறு தரப்புக்களிடமும் முறையிட்டும் வீதியை மறித்து போராட்டம் செய்தும் இதுவரை சரியான தீர்வுகள் எட்டப்படாத நிலை காணப்படுகிறது.


இதன் பின்னணியில் பாடசாலை மாணவர்கள் பருவகால சிட்டைகளை பெற்றும் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் ஏற்றாமல் செல்லும் நிலை தொடர்வதால் மாணவர்கள் பாடசாலை செல்லவும் மீண்டும் வீடு திரும்பவும் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்நிலையில் கடந்த 13.03.2023 அன்று பாடசாலையில் பரீட்சை நடைபெறும் நிலையில் மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாத நிலையில் வீதியில் அந்தரித்த நிலையில் மாங்குளம் பொலிசாருக்கு ஊடகவியலாளர் ஊடாக இந்த விடயம் தெரியப் படுத்தப்பட்டு போக்குவரத்து பொலிஸ் ஊழியர் ஒருவர் வரவழைக்கப்பட்டு காலை 8.12 மணிக்கு வீதியில் வந்த மட்டக்களப்பு சாலைக்கு சொந்தமான யாழ்ப்பாணத்தில் இருந்து கல்முனை நோக்கி சென்ற பேருந்து ஒன்று நிறுத்தப்பட்டு மாணவர்கள் ஏற்றி விடப்பட்டனர்.

இதன்போது பொலிசாருடன் குறித்த சாரதி தர்க்கப்பட்டதோடு குறிப்பிட்ட இடத்தில் செய்தி சேகரித்த ஊடகவியலாளர் அவர்களுடனும் தகர்க்கப்பட்டு அச்சுறுத்தி சென்றிருந்தார்.

இந்நிலையில் குறித்த விடயம் 13.03.2023 மற்றும் 14.03.2023 ஆகிய தினங்களில் குறித்த விடயம் செய்திகளாக வெளிவந்திருந்தது.

இதன் பின்னணியில் 15.03.2023 அன்று இரவு 20.47 மணிக்கு ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்திய மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபை ஊழியர் ஒருவர் ஊடகவியலாளரை கெட்ட வார்த்தைகளால் திட்டி கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.



இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் 16.03.2023 அன்று மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமது சேவைகளை சரியாக செய்யாது ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் இவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் கோரி இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதோடு உரிய தரப்புக்கள் இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.



# ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலையில் திறன் பலகையினூடான கற்றல் செயற்பாடுகள்

அனைத்துலக மருத்துவ நல அமைப்பும் (IMHO-USA) இரட்ணம் பவுண்டேசன் அமைப்பினரும் (Ratnam Foundation-UK) இணைந்து ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு வழங்கிய திறன் பலகையின் மூலம்கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இதற்கான திறன் வகுப்பறையொன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளமை வசதி குறைந்த இம் மாணவர்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

தரம் ஒன்று தொடக்கம் பதினொன்று வரையான வகுப்புக்களில் பயிலும் 300 மாணவர்கள் இதன்மூலம் பயன்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திறப்பு விழா வைபவத்தில் விஞ்ஞான பாட ஆசிரியர் மாணவர்களுடன் இணைந்து திறன் பலகையை பாவித்து கற்பித்தமையும் ஆரம்ப கல்வி மாணவர்கள் திறன் பலகையில் நிகழ்த்திய கற்றல் செயற்பாடுகளும் விருந்தினர்களால் வியந்து பாராட்டப்பட்டது.

இத்திறப்பு விழாவுக்கு விருந்தினர்களாக கலந்து கொண்ட வலிகாம கல்வி வலய தகவல் தொழில்நுட்ப உதவிக்கல்வி பணிப்பாளரினால் (ADE-IT) திறன் பலகையை உச்ச அளவில் பயன்படுத்த ஆலோசனைகள் வழங்கப்பட்டன.




அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் (IMHO-USA) இலங்கைக்கான வதிவிட பணிப்பாளரும் தொடர் நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைத்தார்.





# முன்னாள் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவிற்கு விளக்கமறியல் நீடிப்பு



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. ஸ்ரீரங்காவிற்கு விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு வவுனியா செட்டிக்குளத்தில் நிகழ்ந்த வாகன விபத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பான வழக்கில் அவர் சாட்சிகளை அச்சுறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய வழக்கின் விசாரணைக்கும் சரியாக அவர் முன்னிலையாகவில்லை.

இதனையடுத்து கடந்த 17ஆம் திகதி அவருக்கு வவுனியா நீதிமன்றத்தினால் பிடியாணை உத்தரவை பிறப்பித்திருந்தது.

அதனையடுத்து களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கைது செய்யப்பட்ட ஜே.ஸ்ரீரங்கா கடந்த 18ஆம் திகதி கல்கிஸ்சை நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, அவரை திங்கட்கிழமை (20) வரை விளக்கமறியலில் வைக்கவும், வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதன் பிரகாரம் நேற்றைய தினம் வவுனியா மேல் நீதிமன்றில் ஸ்ரீரங்கா முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் மார்ச் மாதம் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அதே தோற்றத்தில் ஸ்ரீரங்கா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# வலி கிழக்கு பிரதேச சபையினால் 3 ஸ்மார்ட் முன்பள்ளிகள் ஆரம்பிப்பு

## சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவிப்பு

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினால் நேரடியாக முகாமைசெய்யப்படும் மூன்று முன்பள்ளிகளும் சுமாட் முன்பள்ளிகளாக எதிர்வரும் வாரம் முதல் இயங்கும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

முன்பள்ளிகளை வலுப்படுத்தும் எமது சபையின் செயற்றிட்டத்திற்கு அமைய சபை நிதிமூலம் 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் மூன்று சுமாட் போட்கள் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அவை பிரதேச சபையின் நேரடி முகாமைத்துவத்தின் கீழ் இயங்கும் ஆவரங்கால் அரிச்சுவடி முன்பள்ளி, இருபாலை சிகரம் முன்பள்ளி, அச்சுவேலி கஜமுகன் முன்பள்ளிகளுக்கு பொருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தாயகத்தில் முன்பள்ளிக் கல்வியை கட்டியெழுப்ப வேண்டியது மிகவும் அவசியமானதொன்றாக உணர்கின்றோம். ஏற்கனவே எமது சபை இருபாலை சிகரம் முன்பள்ளியினை 10 மில்லியன்கள் வரையில் செலவுடன் புதிதாக அமைத்து திறந்து வைத்துள்ளது. மேலும் அரிச்சுவடி முன்பள்ளி அமைப்பிற்காக 6 மில்லியன்களுக்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளது. கஜமுகன் முன்பள்ளியும் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இப் பள்ளிகள் மாகாண மட்டத்தில் பேட்டி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சிறப்புத்தேர்ச்சி மிக்க ஆசிரியர் குழாத்தின் ஊடாக இயக்கப்படுகின்றது. இம் முன்பள்ளிகளில் மில்லியன்களில் செலவிடப்பட்டு நவீன விளையாட்டு உபகரண தொகுதிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலாக குறித்த முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவச சீருடை, சத்துணவுத்திட்டம், கல்விச் சுற்றுலா என்பவற்றினையும் சபை மேற்கொள்கின்றது. வருமான ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் பிள்ளைகளும் வசதி வாய்ப்புள்ள குடும்ப பிள்ளைகள் பெறும் வாய்ப்புக்களை பாரபட்சமின்றி பெறவேண்டும் என்ற நோக்கில் நாம் மேற்படி முன்பள்ளிகளில் கல்விக்கான முதலீடுகளை நிதிப்பற்றாக்குறை சவாலினையும் எதிர்கொண்டு பயன்படுத்துகின்றோம். இந் நிலைமையினை பிரதேச மக்கள் உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மடு பிரதேசத்தில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது

## - மடு பிரதேச செயலாளர் கீ.பீட் நிஜாகரன்



- மன்னார் நிருபர்

மடு பிரதேசத்தில் சமூகம் சார்பாக பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் நடைபெற்று வருகின்ற போதும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது என மடு பிரதேச செயலாளர் கீ.பீட் நிஜாகரன் தெரிவித்தார்.

"மடு பிரதேச செயலகத்தில் கிறிசலஸ் அமைப்பின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்ட குடி சார் அமைப்பின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில்" பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான சமூக பிரச்சினைகள் மற்றும் வன்முறைகளை தணிக்கும் நோக்கில் ஒரு வலுவான பொறிமுறையை ஏற்படுத்துவதன் மூலம் பெண்களை வலுவூட்டுதலும், அதனூடாக "சமூகத்தை அபிவிருத்தி செய்தலும் எனும் தொனிப்பொருளில்" மன்னார் மாவட்ட பரிந்துரை முன்னெடுப்பு செயல்திட்டம் புதன்கிழமை (22) மாலை இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் சட்டத்தரணிகளான திருமதி. கோசலை மதன், திருமதி. புராதணி புரந்தனன், அருட்தந்தை பிலிப், கிறிசலஸ் அணித்தலைவர் ஜொஹான்சன் ஆகியோர் கலந்து கொண்டதோடு, பாடசாலை மாணவர்கள், திணைக்கள அதிகாரிகள், கிராம அலுவலகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.



இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிறிசலஸ் நிறுவனத்தின் ஒரு திட்டமாக பெண்கள் சிறுவர்களுக்கு எதிராக நடைபெறுகின்ற வன்முறைகள் சம்மந்தமாக அவர்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் தொடர்பில் மடு பிரதேச செயலகம் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மடு பிரதேசத்தில் சமூகம் சார்பாக பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் சிறிதளவில் ஆங்காங்கே நடைபெற்று வருகிறது.

குறித்த வன்முறைகள் குறித்து அரச அரச சார்பற்ற அமைப்புகளின் உத்தியோகத்தர்கள் திணைக்களங்களுடன் இணைந்து பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக வன்முறைகள் குறித்து பணியாற்றி வருகின்றனர்.

எனவே இவ்வாறான பிரச்சினைகளுக்கான தீர்வுகளாக சமூகத்தில் சட்டத்தை அமுல்படுத்தும் வேளையில் மக்கள் மத்தியில் சரியான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது. நாங்கள் இப்பிரதேசத்தில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக பல்வேறு பினக்குகளை கையாண்டு வருகிறோம்.

எனவே இவ்வாறான வன்முறைகளை கட்டுப்படுத்த மக்கள் மத்தியில் இவ்வாறான விழிப்புணர்வுகளை கொண்டு செல்லப்படுவது அவசியம் என தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட இளைஞர்கள் தயாரிக்கப்பட்ட குறும்படம் காட்சிப்படுத்தப்பட்டது.



# மன்னாரில் எலி மொய்த்த உணவுகள் விற்பனைக்காக இருந்த உணவகத்திற்கு மன்னார் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு

- மன்னார் நிருபர் (22-03-2023)

மன்னார் நகரில் பிரபல உணவு விற்பனை நிலையத்தில் சுகாதாரமற்ற மனித பாவனைக்கு பொருத்தமற்ற எலி மொய்த்த உணவுகள் களஞ்சியப் படுத்தியும் விற்பனைக்காக வைத்திருந்த நிலையில் குறித்த உணவகத்துக்கு எதிராக புதன்கிழமை (22) மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

மன்னார் நகரில் பிரபல உணவு விற்பனை நிலையத்தில் சுகாதாரமற்ற மனித பாவனைக்கு பொருத்தமற்ற எலி மொய்த்த உணவுகள் களஞ்சியப் படுத்தியும், விற்பனைக்காக வைத்திருப்பது தொடர்பாகவும் உணவுகள் மேல் எலிகள் பாய்ந்து ஓடும் வீடியோ கானொளியை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு பாவனையாளர் ஒருவரால் அனுப்பப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரிக்கு விடுக்கப்பட்ட பணிப்புரையின் பேரில் குறித்த உணவு கையாளும் நிறுவனம் ஒன்று செவ்வாய்க்கிழமை (21) மன்னார் பொது சுகாதார பரிசோதகர்களினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன் போது சுகாதாரமற்ற முறையில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற எலி மொய்த்த உணவுகளை களஞ்சியப்படுத்தியும் விற்பனைக்காக வெளிக்காட்டியும் வைத்திருந்தமை கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புதன்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உணவகத்துக்கு எதிராக 5 குற்றச்சாட்டுகள் முறையிடப்பட்டதற்கு அமைவாக குறித்த உணவக உரிமையாளருக்கு 70,000 ரூபாய் தண்ட பணம் செலுத்துமாறும் அதனை செலுத்த தவறும் பட்சத்தில் ஒவ்வொரு குற்றத்துக்காகவும் 3 மாதம் சிறை தண்டனையும் 29.03.2023 வரை வியாபாரத்தை தடை செய்து நீதவான் நீதி மன்றத்தினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

மேலும் கைப்பற்றப்பட்ட உணவுப் பொருட்களும் அழிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மன்னார் கள்ளியடி அ.த.க.பாடசாலை தெய்வமணி அறக்கட்டளையால் துவிச்சக்கர வண்டி அன்பளிப்பு

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு, மடு கல்வி வலயத்துக்குற்பட்ட மன்னார் கள்ளியடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பாராட்டு விழா பாடசாலையின் அதிபர் திருமதி. எஸ்.வெலிச்சோர் தலைமையில் புதன்கிழமை (22) நடைபெற்றது.



பல வருடங்களுக்கு பிறகு வரலாற்று சாதனை படைத்து சித்தியடைந்த மாணவன் டெஸ்மன் டினுசாந்த் அவர்களுக்கு தெய்வமணி அறக்கட்டளையால் துவிச்சக்கர வண்டி அன்பளிப்பாகவும் சிறப்பான புள்ளிகளை பெற்ற மேலும் இரு மாணவர்களுக்கு தலா 10,000 ரூபாய் அன்பளிப்பாக லண்டன் தெய்வமணி அறக்கட்டளையால் வழங்கப்பட்டது.

மேலும் மாணவர்களின் சாதனைக்கு உறுதுணையாக நின்ற ஆசிரியர்களுக்கும் அன்பளிப்பாக ஊக்குவிப்பு தொகை தெய்வமணி அறக்கட்டளையால் வழங்கப்பட்டது.



இவ் விழாவின் பிரதம விருந்தினராக மடு வலய கல்விப்பணிப்பாளர் கல்வி அபிவிருத்தி திருமதி. வாசுகி சுதாகரும், சிறப்பு விருந்தினர்களாக மடு வலய ஆரம்ப கல்வி அதிகாரி எஸ்.செல்ரன் யூடிற், மாந்தை மேற்கு கோட்டக்கல்வி அதிகாரி ஜீ.அந்தோனிப்பிள்ளை மற்றும் கள்ளியடி கற்பகவிநாயகர் ஆலய தலைவர் தெய்வமணி அறக்கட்டளை நிறுவனர் வி. முத்துலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ் விழாவிற்கு முன்னாள் அதிபர்கள், கள்ளியடி முகாம் ராணுவ தளபதி மற்றும் ஊர்மக்கள் மக்கள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அவுஸ்ரேலியா அரசாங்கத்தின் 200 மில்லியன் நிதி உதவியில் ஒட்சிசன் ஆலை!




- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நோயாளர்களின் தேவைக்காக ஒட்சிசன் நிரப்பு நிலையம் இல்லாத நிலையில் வெளிமாவட்டங்களில் இருந்து ஒட்சிசன் பெற்றுக் கொண்டு வந்து நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை கடந்த காலத்தில் தொடர்ந்து வந்துள்ளது.

இந்த நிலையில் கடந்த காலத்தில் ஏற்பட்ட கொவிட்-19 தொற்று காரணமாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அமைந்த கொவிட்-19 சிகிச்சை நிலையத்திற்கு தேவையான ஒட்சிசனை பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள் வெளி மாவட்டங்களில் இருந்தே ஒட்சிசனை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் கொவிட்-19 பாதுகாப்பு அவசர மருத்துவ உதவித்திட்டத்தின் கீழ் யுனப்ஸ் (UNOPS) நிறுவத்தின் ஏற்பாட்டில் அவுஸ்ரேலிய தூதரகத்தின் 200 மில்லியன் ரூபா செலவில் கடந்த 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் தொடங்கப்பட்ட ஒட்சிசன் ஆலை அமைக்கும் பணிகள் நிறைவடைந்த நிலையில் தற்போது முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு தேவையான ஒட்சிசன்கள் அங்கேயே உற்பத்தி செய்யப்படுவதுடன் மேலதிகமாக வெளிமாவட்ட மருத்துவமனைகளுக்கும் ஒட்சிசனை வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



இந்த நிலையில் அவுஸ்ரேலிய நாட்டின் இந்த திட்டம் தொடர்பில் 22.03.22 அன்று இலங்கைக்கான அவுஸ்ரேலிய உயர் ஆணையாளர் பால் ஸ்டீபன் (He Paul Stephans) உள்ளிட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்கள்.

இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மு.உமாசங்கர் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில் அவுஸ்ரேலிய தூதரகர் மற்றும் அவரது பாரியார் மற்றும் யுனப்ஸ் திட்டத்தின் இலங்கைக்கான தலைவர் மற்றும் மாவட்ட மருத்துவமனை பணிப்பாளர் வைத்தியர் வாசுதேவா மற்றும் மருத்துவமனை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளார்கள்.

இதன்போது ஒட்சிசன் ஆலையினை பார்வையிட்டுள்ளதுடன் மாவட்ட மருத்துவமனைக்கு இந்த பாரிய ஒட்சிசன் ஆலைக்கான நிதி உதவியினை வழங்கிய அவுஸ்ரேலிய அரசாங்கத்திற்கு மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துள்ளார்கள்.

தொடர்ந்து மாவட்ட மருத்துவமனை மண்டபத்தில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா செய்திகள்
India News

# புதுச்சேரியிலும் அனைத்து பெண்களுக்கும் இலவச பயணம் – முதல்வர் ரங்கசாமி அறிவிப்பு



புதுச்சேரியில் அனைத்து பெண்களுக்கும் இனி இலவச பேருந்து பயணம் மேற்கொள்ளலாம் என முதல்வர் ரங்கசாமி அறிவித்தார். புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி, பட்ஜெட்டில் அரசு பேருந்தில் பட்டியலின பெண்களுக்கு இலவச பயணம் என அறிவித்திருந்தார். இதனை தொடர்ந்து தற்போது, சட்டப்பேரவையில், புதுச்சேரியில் அனைத்து பெண்களுக்கும் இனி இலவச பேருந்து பயணம் மேற்கொள்ளலாம் என அறிவித்துள்ளார். அதே போல், புதுச்சேரியில் விதவைகளுக்கான நிதியுதவி ரூ.3000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. காரைக்காலில் சமீபத்தில் கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ.7,500 நிவாரணம் வழங்கப்படும். அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச மருத்துவ காப்பீடு வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.



# ஆஸ்கர் விருது பெற்ற "தி எலி:.பெண்ட் விஸ்பரர்ஸ்" ஆவணப்பட இயக்குனர் கார்த்திகிக்கு ரூ.1 கோடி ஊக்கத்தொகை வழங்கினார் முதலமைச்சர் ஸ்டாலின்

சிறந்த ஆவணப் படத்துக்கான ஆஸ்கர் விருதை வென்ற "தி எலி.ஃ. பெண்ட் விஸ்பரர்ஸ்" படத்தின் இயக்குனர் கார்த்திகிக்கு 1 கோடி ரூபாய் ஊக்கத்தொகையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். 95-வது ஆஸ்கர் விருது விழாவில் தயாரிப்பாளர் குனீத் மோங்கா தயாரிப்பில் கார்த்திகி கொன்சால்வ் இயக்கத்தில் வெளியான "தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்" ஆவணப்படம் சிறந்த ஆவணப்படத்துகான ஆஸ்கர் விருதை வென்றது. ஆவணப்பட வரிசையில் ஆஸ்கர் விருதை வென்ற முதல் இந்திய ஆவணப்படம் என்ற சாதனையை தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ் படம் படைத்திருக்கிறது. இந்தப் படத்துக்கான ஆஸ்கர் விருதை தயாரிப்பாளர் குனீத் மோங்காவும் இயக்குனர் கார்த்திகி கொண்சால்வும் பெற்றுக் கொண்டனர்.

இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில் ஆஸ்கார் விருது பெற்ற உலக அளவில் தமிழ்நாட்டிற்கு பெருமை தேடித்தந்த "தி எலி.ஃ.பான்ட் விஸ்பரர்ஸ்" ஆவணப்படத்தின் இயக்குனர் கார்த்திகியை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் உரிய ஊக்கத்தொகையாக 1 கோடி ரூபாய்க்கான காசோலையும், பாராட்டு சான்றிதலும் வழங்கினார் மேலும் கார்த்திகி கோன்சால்வ்ஸ்க்கு அன்பளிப்பாக திரைப்படத்தில் நடித்த யானையின் உருவச்சிலை வழங்கப்பட்டது. பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கார்த்திகி கொன்சால்வ், தமிழ்நாட்டுக்காக ஆஸ்கார் விருது வாங்கியது மிக மகிழ்ச்சியாக உள்ளது. பழங்குடியினர் வாழக்கூடிய பகுதியில் இந்த ஆவணப்படம் எடுத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரு பெண்ணாக இருந்து இந்த ஆஸ்கார் விருதை வாங்கியது பெருமை அடைகிறேன் என்று தெரிவித்தார்.

# இந்திய நாடாளுமன்ற மாடியில் நின்று எதிர்க்கட்சிகள் போராட்டம்

அதானி விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றக் கூட்டுக் குழு அமைக்க வலியுறுத்தி எதிர்க்கட்சி எம்பிக்கள் நாடாளுமன்றத்தின் முதல் மாடியில் நின்றவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் கட்டம் கடந்த 13 ஆம் தேதி தொடங்கியது. எனினும், இதுவரை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அலுவல்கள் நடைபெறாமல் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. அதானி நிறுவனம் முறைகேட்டில் ஈடுபட்டதாகக் கூறிய ஹிண்டன்பர்க் அறிக்கை மீது விசாரணை நடத்த நாடாளுமன்றக் கூட்டுக் குழு அமைக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகின்றன.

அதேபோல், ஆளும்கட்சியான பாஜகவும் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகிறது. இந்திய ஜனநாயகம் குறித்து இங்கிலாந்தில் ராகுல் காந்தி பேசிய பேச்சுக்கு அவர் மன்னிப்பு கோர வேண்டும் என்றும் அதுவரை நாடாளுமன்றம் நடைபெற விடமாட்டோம் என்றும் கூறி அவர்களும் நாடாளுமன்றத்தில் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்நிலையில், நாடாளுமன்றம் மார்ச் 21 கூடியதும் நாடாளுமன்ற கட்டிடத்தின் முதல்மாடிக்குச் சென்ற எதிர்க்கட்சி எம்பிக்கள் அங்கு இருந்தபடி போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடாளுமன்றக் கூட்டுக் குழு அமைக்க வலியுறுத்தும் பதாகைகளை கைகளில் ஏந்தியபடியும், அதே கோரிக்கையை வலியுறுத்தும் மிகப் பெரிய பேனரை கீழே தொங்கவிட்டபடியும் அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இதனிடையே, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இன்றும் அமளி நிலவியதால் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

THANA INSURANCE Inc.

Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

## சிலுக்கு சிங்காரியிடம் சிக்கியவர்களின் சரித்திரம்–2

### (கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 8)

**- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**



1990களின் இறுதிப்பகுதியில் மேற்கு ஐரோப்பாவில் சுற்றித்திரிந்த போது குறைந்த விலையில் உணவு என்றால் அது சிலுக்குச் சீன உணவகங்களில் தான் கிடைத்து. ஐரோப்பாவின் குக்கிராமங்களில் கூட சீன உணவகங்கள் திறந்திருந்தன.

உணவகங்கள் தொடக்கம் சைனா மார்கட் அல்லது சைனாபஜார் என்றழைக்கப்படும் சீனப்பொருள்கள் விற்குமிடங்கள் அப்போதே தொடங்கிவிட்டன. இப்போது ஆபிரிக்காக் கண்டம் உட்பட உலக வரைபடத்தில் உள்ள பெரும்பாலான நாடுகளில் சிலுக்கின் வர்த்தகப் பிரசன்னத்தைக் காணமுடியும். 1990களின் பின்னர் சிவப்புக் கமியூனிசத்தை விட்டு சற்று விலகி சந்தைப்பொருளாதார முறைக்கு மாறிய சிலுக்கு உற்பத்திப் பெருக்கத்தில் சாதனைகள் பல செய்து 2000 ஆண்டில் உலக வர்த்தக தாபனத்திலும் அங்கத்துவம் பெற்று மேற்குலகின் கண்களில் விரலை விட்டு ஆட்டிக்கொண்டிருக்கிறது.

ஏற்றுமதி வர்த்தகத்தின் மூலம் குவித்த அமெரிக்க டொலர்களை கடன் வழங்குவது, நேரடி முதலீடுகளை மேற்கொள்வது ஆகியவை மூலம் சிலுக்கு மீள் சுழற்சி செய்கிறது. குறிப்பாக இயற்கைவளமிக்க வறிய நாடுகளில் தனது முதலீடுகளைக் கொட்டிக் குவிக்கிறது. மேற்குலகைப் பொறுத்தமட்டில் வறிய நாடுகளைக் குறித்த அணுகுமுறையாக வெளிநாட்டு உதவி பட்டினி மற்றும் வறுமைதணிப்பு போன்றவற்றில் பரிதாபப்பட்டு உதவி செய்கிறதோடு நின்றுவிடுகிற அதே வேளை, வறிய நாடுகளால் ஒன்றும் இயலாது என்கிற மனோபாவம் நிலவுகிறது.

ஆனால் சிலுக்கு சீனாவைப் பொறுத்தவரை வறியநாடுகளை பங்காளர்களாக அணுகும் நடைமுறையினைக் கையாள்கிறது. நாம் வணிகம் செய்யவே விரும்புகிறோம் உதவி செய்ய அல்ல (we are for business not for aid) என்பதே சிலுக்கின் பொறிமுறை. கடன்வாங்கும் அல்லது முதலீடுகளை எதிர்பார்க்கும் வறிய நாடுகளுக்கு இந்த அணுகுமுறை பிடித்திருக்கிறது. கடன் கொடுப்பதற்காக உலகில் இல்லாத நிபந்தனைகளை விதித்து மேற்குலகம் இழுத்தடித்துக்கொண்டு இருக்கும் போது சிலுக்கு வந்து எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிக்கொண்டு போய்விடுகிறது.




சிலுக்கிடம் நாடுகள் கடன் வாங்கச் செல்வதற்கான பிரதான காரணம் சிலுக்கின் கடன் நிபந்தனைகள் மிகமிகக் குறைவு என்பதனாலாகும். வழமையாக மேற்குலகு கரிசனை கொள்ளும் கடன் வாங்கும் நாட்டில் மனித உரிமை மதிக்கப்படுகிறதா இல்லையா போன்ற விவகாரங்கள் பற்றியெல்லாம் சிலுக்கு கண்டு கொள்ளாது. தியனமென் சதுக்கத்தில் மக்களைப் போட்டுத்தாக்கிய வீரவரலாறு கொண்ட சிலுக்குக்கு மனித உரிமைகள் பற்றிய கரிசனையாவது மண்ணாங்கட்டியாவது. அதுமட்டுமல்லாமல் மேற்குலகு கடன் கொடுக்கும் போது ஒரு நாடு ஏற்கெனவே எந்தளவு கடன்பட்டுள்ளது என்று பார்க்கும். ஆனால் சிலுக்குக்கு அதெல்லாம் பிரச்சினையே இல்லை எவ்வளவு வேண்டுமானாலும் கடன் கொடுக்கும். எல்லாவற்றையும் விட கடனை எப்படிகொடுக்கவேண்டும் என்பதில் வெளிப்படையாக நடந்து கொள்ள வேண்டும் என்று மேற்குலகு எதிர்பார்க்கும். ஆனால் சிலுக்கோ எந்த கணக்குக்கு வேண்டுமானாலும் எத்தனை சதவீதம் செல்லவேண்டுமானாலும் டீல் பண்ணிக் கொடுக்கும்.

ஆகவே, வறிய நாடுகளில் உள்ள ஊழலில் ஊறிய அரசியல்வாதிகள் தமது பங்கினை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிவதால் சிலுக்கின் கடன்களை வெகுவாக விரும்புகின்றனர். கடனுக்கு அப்பாற்பட்டு வறிய நாடுகளில் துறைமுகங்கள், விமான நிலையங்கள். ரயில் பாதைகள், நெடுஞ்சாலைகள் என்று மிகப்பெரிய உட்கட்டுமானங்களைக் கட்டவதற்கு சிலுக்கே தலைசிறந்த தீர்வாக வறிய நாடுகள் நம்புகின்றன. உலகம் பூராகவும் மிகப்பெரியளவில் கட்டுமானத்துறையில் ஈடுபட்டிரப்பதால் சிலுக்கினால் மிகக் குறைந்த செலவில் கட்டுமானங்களைக் கட்டியெழுப்ப முடியும். இதனால் கடனுக்கு உட்கட்டுமானங்களை கட்டிக்கொடுப்பதே சிலுக்கின் மிகப்பிரதான வியாபாரமாக உள்ளது.

அத்தகைய உட்கட்டுமான திட்டங்கள் மூலம் கொள்ளை லாபம் அடிக்கலாம் என்பது வறிய நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளுக்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மிஸ்டர் 10% என்று அமெரிக்க குடியுரிமையுடன் இலங்கையில் அரசியல் செய்யும் ஒரு நபருக்கு கமிஷன் காக்கா என்று பெயர்வரவும் அதுவே காரணம்.

சிலுக்கிடம் கடன் பெறுவது மிக இலகு ஆனால் அதை மீளச்செலுத்துவது இலகுவான காரியமல்ல. சிலுக்கிடம் வாங்கிய கடனை மீளச் செலுத்த முடியாமல் போனால் கடன் மூலம் உருவாக்கப்பட்ட உட்கட்டுமானத்தை சிலுக்கே வாங்கி நிர்வகிக்கும். இலங்கையில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் இதற்கு நல்ல உதாரணம்.

இதனால் குறைவிருத்தி நாடுகளால் விரும்பப்படும் கடனை வழங்குபவராக சிலுக்கு மாறியுள்ளது. இவ்வாறு சிலுக்கு சீனாவிடம் ஆபிரிக்கா, மத்திய ஆசியா மற்றும் கிழக்காசியாவிலுள்ள 97 நாடுகள் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. இவை தமது மொத்தக் கடன்களில் சுமார் 37 சதவீதத்தை சிலுக்கிடமிருந்தே பெற்றுள்ளன.



2022ஆண்டுத் தகவல்களின் படி சிலுக்கிடம் அதிகளவு கடன் பெற்ற நாடுகளின் வரிசையில் பாக்கிஸ்தான் 77.3 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் முதலிடத்தில் உள்ளது. அங்கோலா 36.3 பில்லியன் டொலர்களுடன் இரண்டாமிடத்திலும், எத்தியோப்பியா 7.9 பில்லியன்களுடன் மூன்றாமிடத்திலும், கென்யா 7.4 பில்லியன் டொலர்களுடன் நான்காமிடத்திலும் "ஆசியாவின் ஆச்சரியம்" இலங்கை 6.8 பில்லியனுடன் ஐந்தாமிடத்திலும் வரிசைகட்டி நிற்கின்றன. இலங்கைக்கே கடன்வழங்கி பெருமை சேர்த்துக் கொண்ட வங்காள தேசம் 4 பில்லியன் டொலர்களுடன் ஆறாவது இடத்திலும் உள்ளன.

கடந்த வாரம் விமர்சனத்தில் மாட்டேன் மாட்டேன் என்று அடம் பிடித்த சிலுக்கு இறுதியில் இலங்கையைத் தடவிக்கொடுத்து உதவியதைப் பற்றி குறிப்பிட்டிருந்தேன். இதே போல கடந்த ஒக்டோபர் மாதம் பாக்கிஸ்தானும் 6.3 பில்லியன் கடன்களை அடுத்தவருடத்திற்கும் நீடிக்குமாறு கேட்டிருந்தது. ஆனால் அத்தொகையில் 1.3 பில்லியனை மாத்திரமே அனுமதித்து லேசாகத் தடவிக் கொடுத்ததாகத் தெரிகிறது. அதே போல கென்யாவின் ரெயில்வே திட்டத்திற்காக வழங்கப்பட்ட 4 பில்லியன் டொலர் கடனுக்கான வட்டியைக் குறைக்கவும் மீளச் செலுத்தும் காலப்பகுதியை நீடிப்புச் செய்யவும் ஒத்துக் கொண்டதாகத் தெரிகிறது. எக்வடோர், வெனிசுவேலா ஆகிய நாடுகளுக்கு கடன் மீளச் செலுத்தும் கால நீட்சியையும் வேறு நிவாரணங்களையும் சீனா வழங்கிதாகத் தெரிகிறது.

ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக ஆய்வொன்றிபடி 2000 தொடக்கம் 2019 வரையிலான காலப்பகுதியில் சிலுக்கு தான் வழங்கிய கடன்களில் சுமார் 3.4 பில்லின் டொலர்களை திருப்பிச் செலுத்தத் தேவையில்லை எனக்கூறி பதிவழிப்புச் செய்து விட்டதாகவும் அத்துடன் 15 பில்லியன் பெறுமதியான கடன்களை மீள்நிதியிடல் அல்லது மீள் கட்டமைப்புச் செய்து விட்டதாகவும் தெரியவருகிறது. சிலுக்கிடம் கடன் பெற்ற நாடுகளில் வெனிசுவேலா 2017இல் வங்குரோத்தடைந்தது. லெபனான் சூரினாம் மற்றும் ஸாம்பியா ஆகிய நாடுகள் 2020 ஆண்டிலும் பெலரூஸ் கானா மற்றும் இலங்கை 2022 இலும் வங்குரோத்து நிலையை அடைந்தன.


சீனாவின் கடன்பொறி இராஜ தந்திரம் பற்றி பெரியளவில் பேசப்படுகிறது. சீனா சரியான இடத்தில் கடனைவழங்கி கட்டுமானங்களை உருவாக்கி அவற்றை வைத்து பணம் பண்ணத் தெரியாத வறியநாடுகளிடமிருந்து அவற்றைக் கைப்பற்றுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இக்குற்றச்சாட்டுகளில் உண்மைகள் இல்லாமலில்லை. ஆனால் கடன் வாங்கும் நாடுகளில் உள்ள அரசாங்கங்களின் அரசியல்வாதிகள் தமது மடிகளைக்கனமான நிரப்பிக் கொள்ளும் வல்லமை சிலுக்கின் கடன்களில் இருப்பதால் இத்தகைய பிரதிகூலங்கள் இருப்பினும் அவற்றை கண்டுகொள்ள மாட்டார்கள். சிலுக்கைப் பொறுத்தவரை பிசிநசு தான் முக்கியம் கடனைத்திருப்பித்தர முடியாத நிலை ஏற்படும் போது தாம் கட்டிய உட்கட்டுமானத்தை எவ்வாறு இலாபகரமானதாக இயக்கலாம் என்று கூறும். நீங்களே செய்யுங்கள் என்று சிலுக்கின் கைகளில் அவற்றின் இயக்கத்தை ஒப்படைத்து விடுவார்கள்.

சிலுக்கைப் பொறுத்தவரையில் ஆபிரிக்காவே அதன் புதையல். மிகப்பெரியளவில் பாதைகளையும் துறைமுகங்களையும் ஏனைய உட்கட்டுமானங்களையும் அமைப்பதன் மூலம் கனிமத் தாதுவளமிக்க ஆபிரிக்காவின் இயற்கைவளங்களை பொருளாதார ரீதியாகப் பயன்படுத்துவதன் மூலம் தனக்குத் தேவையான மூலவளக்கிடைப்பனவை உறுதிப்படுத்திக் கொள்கிறது. அது மட்டுமல்லாது உலகின் முதன்மை நாடு என்ற அந்தஸ்தை பெற்றுவிடவேண்டும் என்பதில் குறியாக உள்ளது. அதற்கு உற்பத்தி மூலவளங்களும் எரிபொருளும் விற்பனைச் சந்தைகளும் அவசியம்.

சீனாவின் பொருள்களுக்குப் போட்டியாக குறைந்த செலவில் உற்பத்தி செய்யக் கூடிய நாடுகளை அடையாளங்காண்பது அரிது. சீன கம்பனிகளின் வருகையால் ஆபிரிக்க நாடுகள் நன்மையடைந்தாலும் அந்நாடுகளில் உள்ள உள்ளூர் கம்பனிகளால் அவற்றுடன் போட்டியிட முடிவதில்லை. சிலுக்கைப் பொறுத்தமட்டில் அதன் பட்டுப்பாதைக் (Silk Road) கட்டமைப்பை மீள கட்டமைக்கும் நோக்கில் பட்டி மற்றும் பாதை முயற்சியை (Belt and Road Initiative) ஆரம்பித்தது. இதன் மூலம் சீனாவிலிருந்து மேற்கு ஐரோப்பா வரையிலும் பாதைக் கட்டமைப்புகளையும் கடல்வழி போக்குவரத்தையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் பொருட்டு வங்காளதேசம் இலங்கை பாக்கிஸ்தான் மற்றும் கிழக்கு ஆபிரிக்க நாடுகளின் ஈடன் துறைமுகம் உட்பட பல துறைமுகங்களையும் கட்டியெழுப்பப் பாரிய நிதிகளை வழங்கியது.

சீனாவின் உட்கட்டுமானங்களுக்கான முதலீடுகள் சீனாவுக்குத் தேவையான உள்ளீடுகளைத் தடையின்றிப் பெற்றுக்கொள்வதும் இந்து மகாசமுத்திரத்தில் தனது ஆதிக்கத்தை விரிவாக்கிக் கொள்வதுமாகும். ஆதில் குறிப்பிடத்தக்களவு வெற்றியை அது அடைந்துள்ளதாகவே நோக்கர்கள் கருதுகின்றனர். அந்நாட்டின் நிதிவளம் உயர் தொழில்நுட்பத்தை மிக விரைவாக பயன்படுத்த ஆரம்பித்தள்ளமை என்பன ஒன்றிணைந்து மேற்குலக நாடுகளுக்கு மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளது. தமது பங்கிற்கு மேற்குலக நாடுகள் இப்போது தான் ஆபிரிக்கா உள்ளிட்ட வறிய நாடுகள் மீதான தமது பார்வையை மாற்றிவருதாகத் தெரிகிறது. சீனாவைப் போன்றே ஆபிரிக்காவின் உட்கட்டுமானத் திட்டங்களுக்குத் தாமும் கடன் வழங்கும் பொறிமுறைகளை ஆரம்பித்துள்ளன.

ஆனால், ஏற்கெனவே தனது ஒக்டோபஸ் கரங்களால் வறிய நாடுகளை வளைத்தப்போட்டுவிட்ட சிலுக்கின் பிடியில் இருந்து அவற்றை மீட்கவோ நகர்த்தவோ போதுமாதாக இல்லை. மேலும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் பொருளாதார பின்னடைவினாலும் அதிக பணவீக்கத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றிலிருந்து மிதமாகப்பாதிக்கட்டுள்ள நாடுகளிற்கு சிலுக்கு மேற்கொள்ளும் காய்நகர்த்தல்களை எதிர்கொள்ளும் வல்லமைஇல்லை. தனது முதன்மைத் தானத்தைத் தக்கவைத்துக்கொள்ள அமெரிக்கா கடுமையாகப் போராடி வருவது தெரிந்ததே. இந்நிலையில் ஐரோப்பாவில் யுத்தத்தை ஆரம்பித்த ரஷ்யாவுக்கு சீனா தார்மீக ஆதரவை வழங்கிவருவதும் தெரிந்ததே. ஆனவே சிலுக்கின் கரங்களில் சிக்கியுள்ள நாடுகளுக்கு மாற்றுவழிகள் விரும்பியோ விரும்பாமலோ அதற்கு ஆட்படவேண்டிய கட்டாயத்தில் அவை ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் உள்ளன.




சிலுக்கிடம் அறிந்தோ அல்லது அறியாமலோ சிக்கினால், இருப்பதையும் இழந்து சந்தையில் சாதாரண கோழி முட்டை வியாபாரம் கூட செய்ய இயலாமல் போகும் என்பதே உலக வரலாறு. இது எப்படி என்பதை பின்னர் ஒரு கட்டுரையில் விரிவாக எழுதலாம் என்றுள்ளேன்.

**உதயனின் பிரத்தியேகச் செய்தி**

# மனோ சாட்சி
# மனம் திறக்கிறார் மனோ கணேசன்

**(கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் - அத்தியாயம் 8)**

## "யுத்த நெருக்கடியில், ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பரை கொழும்புக்கு வரவழைத்த கதை"



• ஐநா ஆணையாளர் இலங்கைக்கு வருவதானால், இலங்கை அரசின் ஒப்புதலுடன் தான் வர முடியும்.
• சமாதான காலத்திலே ஆணையாளர் நவநீதன் பிள்ளையின் வருகை ஏற்படுத்திய பரபரப்பை விட லூயிஸ் ஆர்பரின் 2007ம் வருட இலங்கை வருகை பாரியது.
• மக்கள் கண்காணிப்பு குழு என்ற மனித உரிமைகள் அமைப்பை மிகுந்த சவால்களின் மத்தியில் நான் கொழும்பில் நடத்தினேன்.
• தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் புலிகளின் குரலாக, அவர்களின் வழிநடத்தலின் கீழ் செயற்பட்டது
• மனித உரிமை ஆணையாளர் கூட்டமைப்பு பிரதிநிதிகளை சந்திக்க அரசாங்கம் அனுமதி மறுத்தது. கூட்டமைப்பை ஆணையாளர் சந்தித்தே ஆக வேண்டுமென நான் ஐநாவுக்கு கடுமையாக வலியுறுத்தினேன்.
• மூன்று பெண்கள், மனித உரிமை பால் மிகுந்த அர்ப்பணிப்புடன் அந்நேரம் செயற்பட்டார்கள். ஒருவர், கொழும்பு UNDP வதிவிட பிரதிநிதி ஜோதி சங்கேரா (Jyoti Sanghera), அடுத்தவர், மக்கள் கண்காணிப்பு குழுவின் செயலாளர் பிரியாணி குணரத்ன (Priyani Gunaratna), அடுத்தவர், மக்கள் கண்காணிப்பு குழுவுக்கு ஒத்துழைப்புகளை வழங்கிய அம்பிகா சற்குணநாதன் (Ambika Satkunanathan).



------------------------------

**காலகட்டம்: 2007ல் கொடும் யுத்தம் நடைபெறும் காலம். கொழும்பில் தமிழர்கள், தடுக்கி விழுந்தால் வெள்ளை வேன் கடத்தல்காரர்களின் மீதுதான் விழ வேண்டும் என்ற மாதிரியான காலம். ரவிராஜ் படுகொலை நடந்து முடிந்த கொடும் காலம். யுத்த பூமியில், வடகிழக்கில் கடுமையான மனித உரிமை மீறல்கள் நடந்து கொண்டிருந்த காலம்.**

--------------------------------------------------

2007 ஆம் வருடம் அக்டோபர் மாதம், அப்போதைய ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் (Louise Arbor) இலங்கை வந்தார். ஐ.நா மனித உரிமை ஆணையாளர் இலங்கை வர வேண்டும் என்பதிலே நான் பெரும்பங்கை வகித்தேன்.

அப்போதைய ஐநா வளாகத்திற்குள்ளே இருந்த UNDP- ஐநா வளர்ச்சித் திட்டம் என்ற அமைப்பின் இலங்கை வதிவாளர் பிரதிநிதி ஜோதி சங்கேரா (Jyoti Sanghera) என்ற வட இந்திய வம்சாவளி பெண்மணி, இலங்கையில் அப்போது மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அவதானிக்கும் பொறுப்பில் இருந்தார்.

ஐநா ஆணையாளர் இலங்கைக்கு வருவதானால், இலங்கை அரசின் ஒப்புதலுடன்தான் வர முடியும். இலங்கையின் மஹிந்த - கோத்தாபய - பெசில் ராஜபக்ச அரசு, ஐநா மனித உரிமை ஆணையாளர் இலங்கை வருவதை ஒருபோதும் விரும்பவில்லை.

ஆகவே ஐ.நா சபையின் மற்றும் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தினால் மாத்திரமே ஐ.நா ஆணையாளரை இலங்கை வரவைக்க முடியும்.

அவர் இங்கே வந்தால் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விஷயம் உலகத்தின் பேசும்பொருளாக மாறும். அதுமட்டுமல்லாமல் ஐ.நா பொறிமுறைக்கு அன்று கடத்தப்பட்டு, கொல்லப்பட்ட தமிழர்களின் குடும்ப உறுப்பினர்களின் குரலை நேரடியாக கேட்கக்கூடியதாக இருக்கும்.

எனக்கும், எங்களது மக்கள் கண்காணிப்பு குழுவிற்கும், இது தேவையாக இருந்தது.

UNDP வதிவிட பிரதிநிதி ஜோதி சங்கேரா எனக்கும், மக்கள் கண்காணிப்பு குழு செயலாளர் பிரியாணிக்கும் நெருங்கிய நண்பராகிவிட்டார். இலங்கைக்கு வருவதற்கு முன்னாலே நேபாளத்திலும் பணியாற்றிய அவர் மனித உரிமைகள் தொடர்பில் மிகுந்த அக்கறையும், பாதிக்கப்பட்டோர் தொடர்பில் மிகுந்த அனுதாபம் கொண்ட பெண்மணி.

ஒரு கட்டத்தில், இலங்கை அரசாங்கத்தின் கடுமையான எதிர்ப்பு காரணமாக "ஆணையாளர் இலங்கை வரும் யோசனையை ஒத்திவைப்போமா", என்று கூட ஐநா யோசித்தது.

ஆனால், நாங்கள் ஐநா மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு வந்தாக வேண்டும் என்பதிலே உறுதியாக இருந்து, தொடர்ந்து வலியுறுத்தினோம்.

அதுவரையில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதுவர்கள் தமது அரசாங்கங்களுக்கு இரகசியமாக அனுப்பிவைத்த அறிக்கைகள் மட்டுமே இருந்தன.

நேரடியாக சர்வதேச சமூகமும், குறிப்பாக ஐ.நா சபையும், இலங்கையுடன் இந்த விவகாரம் தொடர்பில் முரண்பட ஆரம்பிக்கவில்லை.

ஒருவழியாக அரசாங்கத்தின் மீது அழுத்தம் பிரயோகித்து ஐநா மனித உரிமை ஆணையாளர் இலங்கை வருவதற்கு வாய்ப்பேற்பட்டது.

மிக கடுமையான யுத்தம் நடந்துகொண்டிருந்த காலகட்டம். கடத்தல், படுகொலைகள், பெருந்தொகை கைதுகள், காணாமல் போதல்கள், யுத்தகளத்தில் மட்டும் அல்ல, நேரடி யுத்தம் நடைபெறாத, புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத யாழ் குடா மற்றும் இங்கே கொழும்பு உட்பட தென் இலங்கை பிரதேசங்களிலும் நிகழ்ந்தன.

பின்னாட்களில் யுத்தம் முடிந்து சமாதான காலத்திலே இலங்கை வந்த அப்போதைய ஆணையாளர் நவநீதம் பிள்ளை ஏற்படுத்திய பரபரப்பை விட லூயிஸ் ஆர்பரின் 2007 ஆம் வருட இலங்கை வருகை பெரும் பரபரப்பையும் முக்கியத்துவத்தையும் ஏற்படுத்தியது.

அரசாங்கம் பல நிபந்தனைகளை விதித்தது. இலங்கையிலே ஆணையாளரின் நிகழ்ச்சி நிரல் அரசாங்கத்தின் ஒப்புதலுடன் தான் தயாரிக்கப்பட வேண்டும். இலங்கையில் பொது மக்கள் எவரையும் ஆணையாளர் சந்திக்க கூடாது. குறிப்பிட்ட சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகளையும், அரசு உடன்பாடு தெரிவிக்கும் சிவில் சமூக அங்கத்தவர்களையும் மாத்திரமே ஆணையாளர் சந்திக்க வேண்டும், என்றெல்லாம் நிபந்தனைகள் இருந்தன.

உண்மையில் மனித உரிமை ஆணையாளர் தனது விஜயத்தின் போது, தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரதிநிதிகளை சந்திக்கும் நிகழ்ச்சி இருக்கவில்லை. அரசாங்கமும் அதற்கு உடன்படவில்லை. ஐநாவும் அதுபற்றி பேசாமலேயே ஒரு தர்மசங்கடத்துடன் இருந்தது.

இதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அப்பொழுது வடக்கு, கிழக்கிலே தமிழர்களின் அரசியல் தலைமை விடுதலை புலிகள் வசமே இருந்தது. தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் புலிகளின் குரலாக, அவர்களின் நேரடி வழிநடத்தலின் கீழ் செயற்பட்டது.

அடிக்கடி புலிகளின் தலைவர் பிரபாகரனோ அல்லது அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ் செல்வனோ எல்லா கூட்டமைப்பு எம்பீக்களையும் கிளிநொச்சிக்கு அழைத்து அறிவுறுத்தல்கள் கொடுப்பார்கள்.

கூட்டமைப்பிற்கு தனித்துவமாக செயற்பட முடியாமல் இருந்தது. ஆனால் உலகம் புலிகளை விடுதலை போராளிகளாக அங்கீகரித்திருக்கவில்லை. அரச பயங்கரவாதத்துடன் சேர்த்து, புலிகளையும் பயங்கரவாதிகளாக கடுமையாக பார்த்துவந்த காலம் அதுவாகும்.

புலிகளின் முகவர்கள் (Proxy) என்ற முத்திரை குத்தப்பட்டு இருந்ததால் சர்வதேச சமூகம் கூட்டமைப்பை கொஞ்சம் தள்ளியே வைத்திருந்தது. கூட்டமைப்பின் தலைவரை தவிர பல கூட்டமைப்பு எம்பீக்களுக்கு சில மேற்கத்திய நாடுகள் விசா வழங்கவே மறுத்தன.

இந்த பின்புலம் மற்றும் அரசாங்க கெடுபிடிகளுக்கு மத்தியில், மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் எங்களது மக்கள் கண்காணிப்பு குழுவையும், சிவில் சமூக பிரதிநிதிகளையும், அன்றைய எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்திக்கும், "மூன்று சந்திப்புகள்" என்ற திட்டத்தையே இலங்கை ஐநா அலுவலகம் வைத்திருந்தது.




அதை தவிர யாழ்ப்பாணம் சென்று பிஷப் ஹவுசில் வடக்கில் சிவில் சமூக பிரதிநிதிகளையும் சந்திப்பதற்கு பெரும் அழுத்தத்தின் பிறகு அரசாங்கம் உடன்பட்டது.

இவ்வேளையில் கொழும்பிலே, தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் மற்றும் குழுவினரை ஆணையாளர் சந்திக்க வேண்டும் என்று, கொழும்பு எம்பி என்ற முறையிலும், மக்கள் கண்காணிப்பு குழுவின் ஏற்பாட்டாளர் என்ற முறையிலும், நான் கொழும்பு ஐநா பிரதிநிதிகளுக்கு கடுமையாக வலியுறுத்தினேன்.

அரசாங்கம் உடன்படவில்லை. ஆனால் UNDP வதிவிட பிரதிநிதி ஜோதி சங்கேரா, எனது கருத்தை உள்வாங்கி, மிகச் சிறப்பாகப் பணியாற்றினார். கடைசியில் அரசின் கடும் தயக்கத்துடன், கொழும்பில் கூட்டமைப்பு பிரதிநிதிகளையும் ஆணையாளர் சந்திக்கும் கூட்டமும் நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றது.

ஆனால், அந்த கூட்டத்தில் கூட்டமைப்பு எம்பீக்களுடன் சேர்ந்து நானும் கலந்துகொள்ள வேண்டும் என்றும், அக்கூட்டத்தை ஆணையாளருக்கும், தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கும் இடையிலான கூட்டம் என வர்ணிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கொழும்பு புள்ளர்ஸ் வீதி ஐநா வளாகம்.

ஒரே நாளிலே காலையில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அரை மணித்திலாயம் சந்திப்பு. அந்த சந்திப்பு முடிந்தவுடன் நானும், கூட்டமைப்பு எம்பீக்களும், இன்னொரு அரை மணித்தியாலம் சந்தித்து பேசினோம்.




எங்களது பிரத்தியேக மக்கள் கண்காணிப்பு குழுவுடன், ஐநா மனித உரிமை ஆணையாளரின் சந்திப்பு இதே வளாகத்தில் அடுத்த நாள் நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

(தொடர்ச்சி 13 பக்கம்)



# அறிவும் செயலும் தமிழ் அரசியலும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

வடக்கில் கடந்த ஒரு கிழமைக்குள் மட்டும் மூன்றுக்கு மேற்பட்ட சிலைகள் திறக்கப்பட்டுள்ளன. நடராஜர் சிலை, தவள்ளுவர் சிலை, சங்கிலியன் சிலை, என்பவற்றோடு திருநெல்வேலி சந்தையில் மணிக்கூட்டுத் தூபி ஒன்று.

இச்சிலைகளுக்குப் பின்னால் இருக்கும் அரசியலை கடந்த வாரக் கட்டுரையில் ஓரளவுக்குப் பார்த்தோம். இச்சிலைகளுக்குப் பின்னால் இருக்கக்கூடிய மத அரசியலைத் தனியாக ஆராய வேண்டும். இன்று இக்கட்டுரையானது இச்சிலைகளின் அழகியல் அம்சங்களைக் குறித்த விவாதக் குறிப்புகள் சிலவற்றை முன்வைக்கின்றது.

பொதுவெளி சிற்பங்கள் எனப்படுகின்றவை அவற்றை நிறுவும் நிறுவனங்கள் அல்லது தனி நபர்களின் விருப்பங்களை மட்டும் பிரதிபலிப்பவை அல்ல. அதைவிட ஆழமான பொருளில் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் கலை மேதமையை, அழகியல் உச்சங்களை, அரசியல் கலாச்சார பல்வகைமையை வெளிக்காட்டுபவைகளாக அமைய வேண்டும். ஒரு வெளிப்பார்வையாளர் கண்டு வியக்கும் அளவுக்கு அது ஒரு வெற்றிபெற்ற கலைப் படைப்பாக அமைய வேண்டும்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சில பொதுச் சிற்பங்களை அல்லது சிலைகளை அல்லது விக்கிரகங்களை பார்க்கலாம்.

முதலில் மருதனார்மடம் ஆஞ்சநேயர் சிலையிலிருந்து தொடங்கலாம். இச்சிலை ஒரு வழிபாட்டு உருவாகத்தான் அந்த சந்தியில் நிற்கிறது. இச்சிலையை உருவாக்கியவர்கள் அதனை ஒரு வழிபாட்டு நோக்கத்தையும் மனதில் வைத்து உருவாக்கியிருக்கிறார்கள் என்பது வெளிப்படையானது. அப்படியென்றால் தங்களுடைய இஷ்ட தேவதையை சிலையாக்கும்போது அதன் அழகியல் முழுமை குறித்து ஆகக்கூடிய பட்ச கவனத்தைச் செலுத்தியிருக்க வேண்டும்.

உதாரணமாக ஒருவர் தனக்கு மிகவும் பாசத்துக்குரிய தன் தாய்க்கு ஒரு சிலை வைக்கும்போது அச்சிலை தாயைப் போலவே இருக்க வேண்டும் என்றுதானே எதிர்பார்ப்பார்? அது வேறு யாரையோ போல இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பாரா? இல்லைத்தானே? இது ஆஞ்சநேயருக்கும் பொருந்தும்.

ஆஞ்சநேயரின் ஆகிருதியைக் காட்டுவதுதான் சிலையின் நோக்கம் என்றால் அதற்கென்று செலவழிக்கத் தயாராக இருக்க வேண்டும். அதற்குரிய துறைசார் நிபுணர்களை அணுக வேண்டும். அதை ஒரு தவமாகச் செய்ய வேண்டும். ஆனால் மருதனார்மடம் ஆஞ்சநேயர் தமிழ் அழகியலின் வீழ்ச்சியின் குறியீடாக நிற்கிறார். அவருடைய முகத்துக்கும் உடலுக்கும் இடையிலான அளவுப் பிரமாணம் பிழைத்து விட்டது. அதனால் அது ஒரு கறாளையான சிலை.

இத்தனைக்கும் அச்சிலை இருப்பது யாழ் பல்கலைக்கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறை அமைந்திருக்கும் வளாகத்தில் இருந்து சில நூறு மீட்டர் தொலைவில்தான். ஆனால் பல்கலைக்கழகத்தின் இது சம்பந்தப்பட்ட துறைசார் ஆளுமைகளிடமிருந்து ஆலோசனைகள் பெறப்பட்டு ஆஞ்சநேயர் சிலை கட்டப்பட்டதாகத் தெரியவில்லை. அல்லது குறைந்தபட்சம் அந்த வளாகம் வளர்ச்சியடைந்த பின்னராவது அது தொடர்பான ஆலோசனைகள் பெறப்பட்டதாகத் தெரியவில்லை. ஆயின், யாழ் பல்கலைக்கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் கற்பிக்கப்படுகின்ற சிற்பம் தொடர்பான அழகியல் அறிவிற்கும் ஆஞ்சநேயருக்கும் ஒரு தொடர்பும் கிடையாது. அதாவது அறிவுக்கும் செயலுக்கும் இடையிலுள்ள இடைவெளி.

இந்த இடைவெளி தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான பொதுச் சிற்பங்களுக்குப் பொருந்தும்.

மருதனார்மடம் ஆஞ்சநேயர் மட்டுமல்ல, ஆனையிறவுச் சிவனின் மீதும் அவ்வாறான விமர்சனங்கள் உண்டு. அதை உலோகத்தில் வார்த்திருந்தால் அதன் அழகு மேலும் பொலிந்திருக்கும் என்ற ஒரு கருத்து உண்டு. மேலும் அச்சிலையை வடிவமைக்கும் போதும் அது தொடர்பான துறைசார் நிபுணத்துவ ஆலோசனை பெறப்பட்டதா என்ற கேள்வி உண்டு.

சிவ நடனம் எனப்படுவது கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டதைப் போல ஒரு பிரபஞ்ச நடனம் என்று வர்ணிக்கப்படுகிறது. அந்தப் பிரபஞ்ச அசைவை ஒரு அசையாச் சிலைக்குள் கொண்டு வருவதற்கு மகத்தான சிற்பிகள் தேவை. அசையாச் சிலை ஒன்று பிரபஞ்சப் பேரசைவைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். அது ஓர் அழகியல் சவால்.

ஆனால் நடராஜர் சிலையை வடிவமைக்கும்போது அது தொடர்பான துறைசார் நுட்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. உரிய துறைசார் நிபுணர்களோடு அது தொடர்பாக உரையாடப்பட்டதாகவும் தெரியவில்லை. இது ஆஞ்சநேயருக்கும் நடராஜருக்கும் மட்டுமல்ல, முத்திரச் சந்தையடி சங்கிலியன் சிலையும் உட்பட, தமிழில் பெரும்பாலான பொதுவெளிச் சிற்பங்களுக்கும் பொருந்தும்.

தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவு தூண்களில் தொடங்கி முள்ளிவாய்க்கால் நினைவுச் சிற்பம் வரையிலும் நிலைமை அப்படித்தான் காணப்படுகிறது. உரும்பிராயில் சிவகுமாரன் சிலையில் தொடங்கி வவுனியாவில் பத்மநாபா சிலை வரையிலும் நிலைமை அதுதான். அவரவர் தன் வசதிக்கேற்ப தன் அழகியல் புரிதலுக்கு ஏற்ப சிலைகளை உருவாக்குகிறார்கள். ஆனால் அது ஒரு மக்கள் கூட்டத்தின் கலை மேதமையை பிற நாட்டவர்கள் கண்டு பிரமிக்கும் அளவுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற அடிப்படை விஷயத்தைத் தவற விடுகிறார்கள்.

இதில் ஆகப்பிந்தியது திருநெல்வேலிச் சந்தியில் திறக்கப்பட்ட மணிக்கூட்டுடன் கூடிய ஓர் அலங்காரத்தூபி ஆகும். யாழ் பல்கலைக்கழக சுற்றுச்சூழலுக்குள்தான் அத்தூபி கட்டப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தின் உயர் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு மிக அருகில் காணப்படும் அக்கட்டுமானம் தமிழ் மக்களின் அழகுணர்ச்சியை வெளிப்படுத்துகின்றதா?

ஏன் அதிகம் போவான் யாழ். பல்கலைக்கழகத்தில் கட்டப்பட்டிருக்கும் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் கூட ஓர் அழகியல் முழுமை என்று கூற முடியாது. அதிர்ச்சியூட்டும் நவீனம் என்று கூற முடியாது. உலகிலுள்ள இதுபோன்ற நினைவுச் சின்னங்களோடு ஒப்பிடுகையில் அது மிகவும் சாதாரணமானது.

ஒரு பல்கலைக்கழக வளாகத்தில் காணப்படும் நினைவுச் சின்னத்தின் நிலைமை அதுவென்றால், அதிலிருந்து சற்றுத் தள்ளியிருக்கும் ஏனைய பொது வெளிச் சிற்பங்கள் பற்றி அதிகம் பேசத் தேவையில்லை. இது ஒரு பொதுவான போக்காக தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

ஈழத்தமிழர்கள் மத்தியில் பொதுவெளிச் சிற்பங்களை உருவாக்கும் பலரும் அது தொடர்பான துறைசார் நிபுணர்களை அணுகுவதில்லை என்பதைத்தான் பெரும்பாலான சிற்பங்கள் நமக்கு உணர்த்துகின்றன. இதில் மிக அருந்தலான புறநடைகளை உண்டு. அப்புறநடைகள் யாவும் அதற்குரிய துறைசார் அறிவுடையோரால் உருவாக்கப்பட்டவை.

இவ்வாறான சிலைக் கலாசாரத்தின் பின்னணியில், சிலை அரசியலின் பின்னணியில், பண்ணை வளைவில் நிறுவப்பட்டிருக்கும் திருவள்ளுவரை இனிப் பார்ப்போம். அச்சிலைக்குப் பின்னால் உள்ள மொழி, மத அரசியல் குறித்து ஏற்கனவே சமூகவலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் பரவலாக வாதப்பிரதிவாதங்கள் போய்க்கொண்டிருக்கின்றன. இங்கு அச்சிலையின் அழகியல் அம்சங்களை மட்டும் கவனிப்போம்.

அச்சிலையானது தமிழ்நாட்டைச் சேர்ந்த விஜிபி குழுமத்தின் தலைவர் சந்தோசம் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும். இலங்கையின் எல்லா மாவட்டங்களுக்கும் மொத்தம் 18 சிலைகளை அவர் வழங்கியிருக்கிறார். அதில் இரண்டு வடக்கு கிழக்குக்கு.ஒன்று திருகோணமலைக்கு. மற்றது யாழ்ப்பாணத்திற்கு. இச்சிலைகள் யாவும் வழமையானவை. அவற்றின் அழகியல் அம்சங்கள் குறித்து விவாதிக்க அதிகமில்லை. ஆனால் பண்ணை வளைவில் அச்சிலை வைக்கப்பட்டிருக்கும் இடம், அதன் பின்னணி என்பவற்றைத் தொகுத்து பார்க்கும் போது என்ன தோன்றுகிறது?

அச்சிலைக்காகக் கட்டப்பட்ட பீடத்தோடு சேர்த்துப் பார்க்கும்போது அச்சிலை சிறுத்துப்போய்த் தெரிகிறது. முத்தவெளி, டச்சுக்கோட்டை என்பவற்றின் பின்னணியில் அச்சிலையை நிற்கின்ற வள்ளுவராக வடிவமைத்து இருந்திருந்தால் ஒரு பிரமாண்டத்தை காட்டியிருக்கலாம். ஆனால் சுற்று வளைவில் எதைக் கட்டினாலும் அதற்குப் போக்குவரத்துத் துறைசார் வரையறைகள் உண்டு என்று சுட்டிக் காட்டப்படுகிறது. அதன்படி ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் எதையும் கட்ட முடியாது. ஆயின் ஈகிடைக்கும் வரையறுக்கப்பட்ட வேலிக்குள் எப்படிப்பட்ட ஒரு சிலையை ஸ்தாபிப்பது என்பதில் அரசியல் மற்றும் அழகியல் தெரிவுகள் இருக்கவேண்டும். கோட்டை, முத்தவெளி என்பவற்றின் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது அச்சிலை போதாது என்ற உணர்வு எழுகிறது.


இதுதான் பிரச்சினை. இதுதொடர்பில் துறைசார் நிபுணர்களின் அறிவை யாரும் பெற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. சிலைகளின் விடயத்தில் மட்டுமல்ல, பொதுவெளிச்சிற்பங்கள் விடயத்தில் மட்டுமல்ல, அரசியலும் உட்பட ஈழத்தமிழர்களின் பெரும்பாலான பொதுவிடயங்களில் அறிவுக்கும் செயலுக்கும் சம்பந்தமே இல்லை. அறிவு தன் பாட்டில் பட்டங்களில் ஜீவிக்கின்றது. செயல் தன்பாட்டில் நடக்கின்றது. அறிவுக்கும் செயலுக்கும் இடையிலான இந்த இடைவெளி அதிகமாக வெளிப்படும் இடமும் அதிக நாசத்தை விளைவித்த இடமும் எதுவென்றால் தமிழ் அரசியல்தான். சிலைகள் கோணல்மாணலாக வருவதோ அல்லது பொருத்தமற்ற இடங்களில் பொருத்தமற்ற அளவுகளில் நிர்மாணிக்கப்படுவதோ அழகியற் சிதைவு மட்டுமே. பண்பாட்டுச் சிதைவு மட்டுமே. ஆனால் அரசியலில் அவ்வாறு துறைசார் நிபுணத்துவத்தை புறக்கணிப்பது அல்லது சட்டக் கண்களால் எல்லாவற்றையும் அளப்பது என்பது எத்துணை பாரதூரமானது என்பதனைக் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கண்டோம். அறிவையும் செயலையும் பொருத்தமான விதங்களில் இணைக்கத் தவறிய ஒரு சமூகம் இப்பொழுது சிலைகளை வைத்துவிட்டு ஆளையாள் பிடித்துத் தின்னுகின்றதா?

## வீணாவின் கவிக்கணை

ஊரெல்லாம் வாணவேடிக்கை
அதை வேடிக்கை மட்டும் பார்க்கும்
பிஞ்சு உள்ளங்கள்,
படிக்கும் வயதில் வேலைப் பார்த்தும்,
குடிக்கும் கஞ்சியே கேள்விக்குறி,
ஓடி ஆடி விளையாடும் வயதில்
ஓயாது வேலைப்பார்த்தும்
ஓட்டை சட்டையும்,
அறுந்த செரும்புமே
கிடைத்த மிச்சமாம்,
மழலை செல்வங்களாம்
வாழும் தெய்வங்களை
படிக்க வைத்து விட்டால்
பெற்றோர்களே,
உன் சந்ததி வாழ்ந்து
உன் சுற்றமும் தழைத்திடும்.

கனடிய செய்திகள்
Canadian News

# ஈழத்து சித்தர் தவத்திரு சிவயோக சுவாமிகள் 59வது மகா சமாதிக் குருபூசை – கனடாவில்



சித்தர் தவத்திரு சிவயோக சுவாமிகள் 59வது மகா சமாதிக் குருபூசை எதிர்வரும் பங்குனி அயிலிய நட்சத்திரம். 01-04-2023 சனிக்கிழமையன்று பின்வரும் விலாசத்தில் காலை 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரையும் நடைபெறும்.

RICHMOND HILL-PILLAIYAR TEMPLE
CULTURAL HALL RICHMOND HILL
10865 Bayview Ave.
Richmond Hill, ON L4S 1M1

சுவாமிகளின் அடியார்கள் மற்றும் அன்பர்கள் யாவரும் குருபூஜசயில் பங்குபற்றி அருளாசி பெற்று பிரசாதத்தையும் பெற்றுச் செல்லுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

**சிவயோக சவாமிகள் திருவடி நம்பிக்கை நிதியம்**
**தொடர்புகளுக்கு: தி. சிவயோகபதி (416) 335-5458**

உலக செய்திகள்
World News

# இந்தியாவில் மனித உரிமை மீறல்: அமெரிக்க அறிக்கையில் தகவல்




அமெரிக்காவின் வெளிவிவகார துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் சார்பில், உலக நாடுகளின் மனித உரிமை மீறல் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த ஆண்டறிக்கையில், "ரஷ்யா, சீனா, ஈரான், வட கொரியா, மியான்மர் போன்ற நாடுகளில் பெரிய அளவிலான மனித உரிமை மீறல்கள் நடக்கின்றன. இந்தியாவை பொருத்தமட்டில் 2022ம் ஆண்டில் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், பத்திரிகை சுதந்திரம், மத மற்றும் இன சிறுபான்மையினரை குறிவைக்கும் வன்முறை உள்ளிட்ட மனித உரிமை மீறல் வழக்குகள் பதிவாகியுள்ளன. மேலும் அரசியல் தடுப்புக்காவல், தன்னிச்சையான கைதுகள் அல்லது தடுப்புக்காவல்கள், ஊடகத்தின் மீதான கட்டுப்பாடுகள், ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறை உள்ளிட்ட மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடந்துள்ளன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க வெளியுறவு துறை சார்பில் ஏற்கனவே இதுபோன்ற மனித உரிமை மீறல் தொடர்பான அறிக்கைகள் வெளியான போது, அதனை இந்திய அரசு மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# கனடா தமிழ்க் கவிஞர் கழகம் நடத்தவுள்ள "யாப்பிலக்கண வகுப்புக்கள்"

கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் "தமிழ்க் கவிஞர் கழகம்" நடத்தவுள்ள "யாப்பிலக்கண வகுப்புக்கள்" எதிர்வரும் 25-03-2023 அன்று ஆரம்பமாகின்றன. ஆர்வமுள்ளவர்கள் உலகின் எப்பகுதியிலிருந்தும் பங்குபற்றலாம். விபரங்களுக்கு பின்வரும் அறிவித்தலைப் பார்க்கவும்.

THE ASSOCIATION OF CANADIAN TAMIL POETS
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்
யாப்பிலக்கண வகுப்புகள்

அன்புடையீர்,

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் நடத்தும் 2023 ஆம் ஆண்டுக்கான முதல் யாப்பிலக்கண வகுப்பு பாவலர் மாவிலி மைந்தன் சண்முகராஜா அவர்களால் 25-03-2023 சனிக்கிழமை கிழக்கு அமெரிக்கா கனடா நேரம் காலை 10 மணிக்கு மெய்நிகர் வழியாக நடைபெறவுள்ளது என்பதை உவகையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆர்வமுள்ள அனைவரையும் வகுப்பில் இணைந்து பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

ZOOM MEETING ID : 885 6575 9238 NO PASSCODE

அருட்கவி ஞானகணேசன் தம்பிஜயா, துணைத்தலைவர் - 647-244-0813
பவானி தர்மகுலசிங்கம் , செயலாளர் - 437-991-8202
குமரகுரு கணபதிப்பிள்ளை, பொருளாளர் - 647-224-8871

(11 பக்கத் தொடர்ச்சி)

# மனோ சாட்சி

அன்று, முதல்நாள் சந்திப்பிற்காக ஐநா வளாகத்திற்குள்ளே ரணிலின் முதல் சந்திப்பு முடியும்வரை காத்திருந்த பொழுது, என்னை அங்கு கண்ட கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன், "They invited you too? Are you also meeting her with us?" (உங்களையும் அழைத்தார்களா? நீங்களும் எங்களுடன் அவரை சந்திக்கின்றீர்களோ..?) என்று என்னை பார்த்து அசந்தர்பமாக கேட்டார். நான் ஒன்றும் சொல்லவில்லை. மனதுக்குள் சிரித்துக்கொண்டேன்.

ஆனால் அங்கிருந்த UNDP பிரதிநிதி ஜோதி சங்கேரா "It's Mano who insisted that Commissioner should meet you too" (மனோதான், உங்களையும் ஆணையாளர் சந்திக்க வேண்டுமென வலியுறுத்தினார்..!) என்று என்னை காட்டி சட்டென சொன்னார். அப்படியே அந்த கூட்டம் நடந்து முடிந்தது.

இக்காலகட்டத்தில், மூன்று, மனோ திடம் கொண்ட பெண்கள், தத்தமது தொழில் பொறுப்புகளுக்கு அப்பால், மனித உரிமை தொடர்பான தங்கள் உறுதியான நிலைப்பாடுகள் காரணமாக, போர் கெடுபிடிகளுக்கு மத்தியில் ஐநா மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பரின் வருகை மற்றும் எங்களது மக்கள் கண்காணிப்பு குழுவின் நடவடிக்கைகளுக்கு மிகுந்த ஒத்துழைப்புகளை வழங்கினார்கள்.

இவர்கள் இல்லாவிட்டால், ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் (Louise Arbor) அவர்களது இலங்கை விஜயம் சாத்தியமாகி இருக்காது. அல்லது, நாம் எதிர்பார்த்த சாதக விளைவுகளை ஏற்படுத்தி இருக்காது என நான் கூறியே ஆக வேண்டும்.

ஒருவர், UNDP வதிவிட பிரதிநிதி ஜோதி சங்கேரா, அடுத்தவர், மக்கள் கண்காணிப்பு குழுவின் செயலாளர் பிரியாணி குணரத்ன (Priyani Gunaratna), அடுத்தவர், மக்கள் கண்காணிப்பு குழுவுக்கு ஒத்துழைப்புகளை வழங்கிய அம்பிகா சற்குணநாதன் (Ambika Satkunanathan). அம்பிகா பிற்காலத்தில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பணியாற்றினார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசிய பட்டியலிலும் அவர் பெயர் இடம் பெற்றது என நினைக்கிறேன்.

அடுத்த நாள், ஐநா மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பரை, காணாமல் போனவர்களின் குடும்ப அங்கத்தவர்களுடன் சந்திக்கும் மக்கள் கண்காணிப்பு குழுவின் பிரதான கூட்டம் ஏற்பாடாகி இருந்தது.
அக்கூட்டத்தில், மக்கள் கண்காணிப்பு குழு உறுப்பினர் என்ற முறையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்பியும் கலந்துக்கொண்டார். இக்கூட்டம் பற்றி பிறகு வேறு இடத்தில் கூறுகிறேன்.

# ஏமாற்றம்!

எல்லோரும் ஒருநாளில் எங்கேயோ ஏமாற்றம்
ஏய்ப்பவன் அடிமையென ஏழைகளின் ஏமாற்றம்
கொல்லும்நோய் வந்திட கோடீஸ்வரன் ஏமாற்றம்
கூடினாலும் குறைசொல்லும் கூட்டணியும் ஏமாற்றம்
வெல்லுகிற வீரனுக்கும் வயோதிகம் ஏமாற்றம்
வந்தபின்னே தவிக்கின்ற வறுமையும் ஏமாற்றம்
சொல்லுகிற வார்த்தைகள் சுட்டெரிக்க ஏமாற்றம்
சுதந்திரத்தை தனக்கென்ற சோம்பேறிகள் ஏமாற்றம்


அதிகப்படி இலவசமோ அரசியல் ஏமாற்றம்
ஆட்சியாளர் வாக்குறுதி அன்றாட ஏமாற்றம்
துதிப்பாடும் கூட்டங்கள் தொடர்வதும் ஏமாற்றம்
துளிர்த்திடும் லஞ்சஊழல் துறைதோறும் ஏமாற்றம்
முதியோரை காக்காமல் முடக்குவதும் ஏமாற்றம்
முதலிலா தரகுத்தொழில் மொத்தமாய் ஏமாற்றம்
விதியெனவே நினைப்பது வாழ்க்கையே ஏமாற்றம்
விதைக்காமல் விவசாயி வறட்சியால் ஏமாற்றம்

நதியிணைப்பு செய்யாமை நாட்டிற்கே ஏமாற்றம்
நாட்டுக்குள் பிரிவினையால் நல்லிணக்க ஏமாற்றம்
கதியற்ற தமிழருக்கு கண்ணீரே ஏமாற்றம்
காத்திட மனமில்லா கட்சிகளின் ஏமாற்றம்
நிதிக்கேட்டு தொண்டர்களை நெருக்குவதும் ஏமாற்றம்
நாளுமொரு கட்சியென நடைமுறையும் ஏமாற்றம்
மதிகலங்கும் நன்கொடையால் மாணவர்கள் ஏமாற்றம்
மகிழ்ந்திடும் முட்டாள்தினம் மடமையின் ஏமாற்றம்.

- கவிஞர் கண்ணன்சேகர் 9894976159 -


12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் அனைவருக்கும் ஆதரவு உள்ளது.
மார்ச் 31க்குள் இணையத்தளத்தில் விண்ணப்பிக்கவும்.
ontario.ca/CatchUpPayments
உங்கள் பிள்ளைக்கு உதவித்தொகையாக $250 வரை பெற்றுக் கொள்ளுங்கள்
Ontario
இதற்குரிய கட்டணம் ஒன்ராறியோ அரசாங்கத்தால் செலுத்தப்பட்டுள்ளது


தமிழீழத்தின் இசை வேந்தன்
வர்ண.ராமேஸ்வரன் நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா
தமிழக - கனடிய பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன்
கலைமாமணி
ராஜேஸ் வைத்தியா
வழங்கும்
இசைச் சங்கமம் 2023
APRIL 23, 2023 @ 6PM
CHINESE CULTURAL CENTRE
5183 SHEPPARD AVE. EAST
SCARBOROUGH
அன்பளிப்பு
VVIP $200
VIP $100
$50
விழா சரியாக மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்
தொடர்புகளுக்கு: ஈழநாடு பரமேஸ் 416-841-9600


SUBRA
SUBRA
MORTGAGE SOLUTIONS
MORTGAGE FINANCIAL
✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION
Know the basic things on Mortgage to find a better way for your Future!
CONTACT US TODAY
NESAN
416-908-5656
1st & 2nd Mortgages
Purchase
Refinance
Renewal
Switches
Equity lind of Credit
Pre-approvals
Self-employed
Multi-rental properties
New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG mortgages
TD Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
MCAP

# நாவற்குழி விகாரைக்கு வந்த சவேந்திர சில்வாவிற்கு தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பு

- நடராசா லோகதயாளன்



**யா**ழ்ப்பாணம் - நாவற்குழியில் வலிந்து கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு போர்க் குற்றச்சாட்டுகளிற்கு ஆளாகியுள்ள ஜெனரல் சவேந்திர சில்வாவின் வருகைக்கு எதிராக தமிழ் மக்கள் பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இலங்கை முப்படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் யாழ்ப்பாண வருகையை எதிர்த்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையில் மக்கள் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சனிக்கிழமை (18-03-2023) மாலை 3 மணி அளவில் அவர் அந்த விகாரைக்கு வரவிருந்த நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"தமிழ் இனப்படுகொலையாளி சவேந்திர சில்வா வெளியேறு", "சவேந்திர சில்வா போர்க்குற்றவாளி" போன்ற வாசகங்களை கொண்ட பதாதைகளை ஏந்தி மக்கள் அவருக்கு எதிரான கோ'ங்களை எழுப்பினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

தமிழர் தாயகப் பகுதியில் வலிந்து பௌத்த ஆக்கிரமிப்பு நடைபெறுகிறது என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கூறினர். போர் முடிந்து 14 ஆண்டுகள் ஆகும் நிலையில், இப்படியான செயல்பாடுகள் தொடருகின்றன என்று போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.



ஒரு புறம் இணக்கப்பாடு, இணைந்த தேசம், அனைவரும் சமம் என்றெல்லாம் வெளியுலகிற்கு போலியான முகத்தைக் காட்டும் இலங்கை அரசு, உண்மையில் தமிழர் தாயகப் பகுதிகளில் வலிந்த சிங்களக் குடியேற்றம், தமிழ் மக்களின் கலாச்சார அழிப்பு ஆகியவற்றில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர் என்று தமிழர் தரப்பு ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டுகிறது.

நில ஆக்கிரமிப்பு செய்வதற்கு இப்போது தொல்லியல் பூமி என்ற வழிமுறையை இப்போது சிங்கள அரசு முன்னெடுத்து வருகிறது என்று வடக்கு-கிழக்குப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அப்படியான ஆக்கிரமிப்பின் ஒரு அடையாளமே நாவற்குழி விகாரை என்று சவேந்திர சில்வாவிற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கூறினர்.

"நாவற்குழு விகாரை சிங்கள பௌத்த ஆக்கிரப்பின் அடையாளம்" என்ற கோஷமும் எழுப்பப்பட்டது.

தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பிற்கு மத்தியில் நாவற்குழிக்கு வருகை தந்த சவேந்திர சில்வா விகாரையின் மண்டப கலசத் திறப்பு விழாவில் பங்கு கொண்டு கலசத்தை திறந்து வைத்து சிறிது நேரத்தில் அங்கிருந்து வெளியேறினார்.

இந் நிகழ்வில் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த பெருமளவு பௌத்த துறவிகளும் பங்குகொண்டனர்.



# தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக்கிளைச் செயலாளரை பயங்கரவாத பொலிஸ் விசாரணைக்கு அழைப்பு


(எமது செய்தியாளர்)

**போ**ர் முடிந்து 14 ஆண்டுகள் ஆகும் நிலையிலும், தமிழர்கள் திட்டமிட்ட வகையில் இலக்கு வைக்கப்பட்டு பயங்கரவாத தடுப்பு விசாரணைகளுக்கு அழைக்கப்படுவது தொடர்கதையாகவே உள்ளது.

இலங்கை கடுமையான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திவிக்கும் நிலையில், பன்னாட்டு சமூகம் மற்றும் உதவி வழங்கும் நாடுகள், அமைப்புகள், பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதை முக்கியமானதொரு நிபந்தனையாக வைத்துள்ளனர்.

அந்தச் சட்டம் நீக்கப்படாத வரையில், உதவிகளிற்கான வாய்ப்பு குறைவே என்ற செய்தி சொல்லப்பட்ட நிலையில், ஐ நா மனித உரிமைகள் ஆணையம் உட்பட பல அமைப்புகளிற்கு இலங்கை அரசு போலி வாக்குறுதிகளை வழங்கி தம்மை காப்பாற்றிக்கொள்ள முயல்கிறது என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகியுள்ளது.

நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் அல்லது அதற்கு மாற்றாக சர்வதேச நியமங்களிற்கு ஏற்ப புதிய சட்டம் இயற்றப்படும் என்று இலங்கை அரசு வாக்குறுதியை அளித்தாலும், உள்நாட்டில் அச்சட்டத்தின் கீழ் கைதுகள், அச்சுறுத்தல்கள் தொடரவே செய்கின்றன.




அவ்வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைக்கான காரணங்கள் எவையும் குறிப்பிடப்படாது, சனிக்கிழமையன்று (18) அவருக்கு வழங்கப்பட்டுள்ள எழுத்துமூல அழைப்பாணையில், வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காக எதிர்வரும் 2023.03.24 ஆம் திகதி, மு.ப.9.00 மணிக்கு, பரந்தனில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப்பிரிவுக்கு சமுகமளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களினதும் கௌரவ. தவிசாளர்கள் உள்ளிட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்பது உறுப்பினர்கள் TID யினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், கட்சியின் மாவட்டக்கிளைச் செயலாளராக இருந்து சமூகநலப் பணிகளிலும், அரசியற் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திவரும் வீரவாகு விஜயகுமார் அவர்களும் தற்போது விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறையில் 10 படகுகள் தீக்கிரை, புதன் அதிகாலை பயங்கரம்

- எமது யாழ் செய்தியாளர்



**பு**தன்கிழமை அதிகாலை யாழ்ப்பாணக் கடற்கரையோரம் 10 படகுகள் தீக்கிரையாகியுள்ளன.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 படகுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. குடா நாட்டில் சர்ச்சைக்குரிய கடலட்டை தொழில் குறித்து தொடர்ச்சியாக சர்ச்சைகள் இருந்துவரும் நிலையில் இந்த படகுகள் தீக்கிரையாகியுள்ளன என்று உள்ளூர் தகவல்கள் கூறுகின்றன.

அதிலும் குறிப்பாக, கடலட்டை தொழிலில் ஈடுபட்டு வந்த படகுகள் தற்போது இத்தொழிலில் ஈடுபடாமல் நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சமயமே இவ்வாறு தீயிடப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

அல்ஜித்தா, தில்லையடி, புத்தளம் முகவரியில் வசிக்கும் சாகுல் ஹமீது ஜௌபர் (672332982V) என்பவருக்குச் சொந்தமான 10 படகுகளே புதன் அதிகாலை 2 மணியளவில், தீக்கிரையாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றபோதும் இதற்கான காரணம் மற்றும் சந்தேக நபர்களோ இதுவரை அறியப்படவில்லை.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

சீனா மற்றும் அரச ஆதரவுடன் யாழ் குடா நாட்டின் பல பகுதிகளில் கடலட்டை பண்ணைகள் இயங்கி வருவது உள்ளூர் மீனவர்களிடையே பெரும் விசனத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் யாழ் குடாநாட்டில் வளர்க்கப்படும் கடல் அட்டைகள் யாவும் சீனாவிற்கே ஏற்றுமதி செய்யும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. சீனா உட்பட பல கிழக்காசிய நாடுகளில் கடலட்டை விருப்ப கடலுணவுகளில் ஒன்றாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இடிக்கப்பட்ட சிவன் கோவிலும், பங்குனி உத்திர எதிர்பார்ப்பும்

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்



"அரசு அனுமதித்தால் எதிர்வரும் பங்குனி உத்திரத்தன்று, இடிக்கப்பட்ட சிவன் கோவிலில் மீண்டும் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ய தயாராக இருக்கிறோம்" ஆறு திருமுருகன், உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்.

தொல்லியல் பூமி என்ற பூச்சாண்டி, படை முகாம்கள், கைவிடப்பட்ட நிலங்கள், வலிந்து ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வாக்குமூல பதிவிற்கு அழைக்கப்படுவது என்பவை இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியில் உள்ள தமிழர்களிற்கு பழகிப்போன ஒன்றாகிவிட்டது.

அதேவேளை, நீண்டகாலமாக வலிந்த இராணுவ ஆக்கிரமிப்பின் கீழுள்ள, தனியர், அறக்கட்டளை, ஆலயச் சொத்துகளின் நிலை என்னவாக உள்ளது என்பதை யாரும் அறிய முடியாத வகையில் இரும்புத் திரையால் மறைக்கப்பட்டுள்ளன.

அப்படியான இரும்புத் திரைக்கு பின்னால் ஏராளமான சோகக்கதைகள் உள்ளன. போர்க்காலத்தில் அபகரிக்கப்பட்ட காணிகளின் நிலை என்ன, விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டவர்களின் நிலை என்ன, அந்தப் பகுதியில் தாங்கள் நடத்திவந்த தொழில்களிற்கு என்னவாயிற்று, பாரிய மனித உரிமை மீறல்களிற்கு மௌனமான சாட்சிகளாக இருக்கும் இடங்களிற்கு என்னவாயிற்று என்பதற்கெல்லாம் பதில்கள் இல்லை.

இராணுவத்தினர் இருக்கும் இடம் பாதுகாப்பானது என்பது இலங்கைக்கு பொருந்தாதோ என்று தோன்றுகிறது. ஏனென்றால் இராணுவ ஆக்கிரமிப்பு பகுதியில் இருந்த ஆனானப்பட்ட சிவபெருமானுக்கே பாதுகாப்பு இல்லாமல் அவரது ஆலயமே இடிக்கப்பட்டுள்ளதை இரு வாரங்களிற்கு முன்னர் முதல் முறையாக கனடா உதயனே ஆதாரங்களுடன் வெளியிட்டது.

அந்தச் செய்தி வெளியாகி, பல ஊடகங்கள் அதையடுத்து செய்திகளை வெளியிட்ட நிலையில், அப்படி ஏதும் நடைபெறவில்லை என்பதை மறைமுகமாகக் கூறும் வகையில் சில தகவல்கள் வெளியாயின. ஆனால் உதயன் கூறியது உண்மையே என்பது இப்போது ஆதாரத்துடன் வெளிவந்துள்ளது.



யாழ்ப்பாணம் கீரிமலைப் பகுதியில் இருந்த சிவ சிண்ணங்கள் இடித்து அழிக்கப்பட்டதாக வெளிவந்த செய்திகள் உண்மையானது என்று அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் ஆறு.திருமுருகன் மீண்டும் உறுதி செய்தார்.

அண்மையில் இன்னும் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் கீரிமலை பகுதிக்கு சென்று வந்த அவர் இந்த செய்தியாளரிடம் பிரத்தியேகமாகப் பேசினார்.

"கீரிமலையில் இருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் சடையம்மா மடம் என்பவற்றோடு சில சமாதிகளும் இடித்து அழிக்கப்பட்டதாக வெளிவந்த செய்தி தொடர்பில் நானும் கருத்து வெளியிட்டிருந்தேன். இருந்தபோதும் அங்கே கீரிமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகை அருகில் இருந்த ஆதிலிங்கேஸ்வரர் எனப்படும் சிவன் ஆலயமோ அல்லது சடையம்மா மடமோ அழிக்கப்படவில்லை. அவை அனைத்தும் இருப்பதாக சில அரச பிரதிநிதிகள் தகவல் வெளியிட்டதனால் அந்த இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட நீண்ட முயற்சி மேற்கொண்டோம்".

தீவிரமான முயற்சிகளிற்கு பிறகு அங்கு சென்று நிலைமையை நேரில் பார்க்கும் அனுமதி அளிக்கப்பட்டது.

"சிவன் அருளால் கடற்படையினரின் பாதுகாப்பில் உள்ள பகுதிக்குள் சென்று நேரில் நிலவரத்தை பார்வையிட்டேன். பார்வையிட்டதன் அடிப்படையில் அங்கே இருந்த சிவன் ஆலயம் இருந்த தடயமே தெரியாது அழிக்கப்பட்டுள்ளது என்பதே மிகப் பெரிய உண்மையாகும். ஏனெனில் அந்த இடத்தில் நின்றபோது வார்த்தைகள் வரவில்லை. உண்மை இவ்வாறு இருக்கும் போது சிவன் ஆலயத்தை வாழ்நாளில் பார்த்திராதவர்கள் அந்த சிவன் ஆலயம் இருக்கின்றது எனக்கூறி எம்மை ஏமாற்றி விட்டனர்" என்று மிகவும் மன வேதனையுடன் கூறினார்.

கடற்கரையை ஒட்டி குறைந்தது 350 ஆண்டுகள் பழமையானது என்று அறியப்பட்ட அந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இப்போது முற்றாக இடித்து இல்லாமல் ஆக்கப்பட்டுள்ள நிலையில், அங்கிருந்த சடையம்மா மடம் மற்றும் இதர இடங்களாவது பாதுகாப்பாக உள்ளதா என்று ஆறு திருமுருகனிடம் கேட்டேன்.

"இதன் அருகே இருந்த சடையம்மா மடமும் அடியோடு அழிக்கப்பட்டு பற்றை மட்டுமே வளர்ந்த பிரதேசமாக காணப்படுகின்றது. இத்தனைக்கும் ஒரேயொரு ஆறுதல் எமது பெண் சித்தர் சடையம்மாவின் சமாதி முழுமையாக உள்ளது. அத்தோடு அங்கே இருந்த நான்கு சமாதிகளில் இரண்டு சமாதிகள் உள்ளன. ஏனைய இரண்டு சமாதிகளும் இடித்து தள்ளப்பட்ட நிலையில் உள்ளது".

கீரிமலை பகுதிக்குச் சென்ற அவருக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சியே காத்திருந்தது. அடுத்தடுத்து பல சிவ சின்னங்கள் அங்கு இடித்தழிக்கப்பட்டுள்ளது அவரை மட்டுமின்றி லட்சக்கணக்கான சைவர்களை மிகவும் கவலைக்குள்ளாக்கியுள்ளது. ஆதிலிங்கேஸ்வரர், சடையம்மா சமாதிக்கு அருகிலிருந்த வேறு இரு சித்தர்களின் சமாதிகள் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு பழமையான இதர சில வழிபாட்டு இடங்களையும் காணவில்லை அல்லது அழிக்கப்பட்டுள்ளது இப்போது தெரியவந்துள்ளது. ஆறு திருமுகன் தொடர்ந்து கூறுகையில்:



"அனைத்திற்கும் அப்பால் சற்று தொலைவில் இருந்த வைரவர் ஆலயம் இருந்த ஆதாரத்தையும் காண முடியவில்லை. இதேநேரம் ஜனாதிபதி மாளிகை நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக ஓர் நிறுவனத்திற்கு கையளிக்க முயற்சிக்கப்படுகின்றது".

இதேவேளை அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் அந்த இடத்தை பார்வையிடச் சென்ற போது, அந்த நிறுவனத்தினரும் ஜனாதிபதி மாளிகைப் பகுதியை பார்வையிட அங்கே வருகை தந்திருந்தனர். அவர்களுடனும் ஆறு திருமுருகன் உரையாடியுள்ளார்.

"ஜனாதிபதி மாளிகையை குத்தகைக்கு பெறவுள்ள நிறுவனத்தையும் நான் அனுகி ஆலயங்கள் இருந்த பகுதிகளின் ஆலயங்கள் இடித்து அழிக்கப்பட்டுள்ளபோதிலும் எஞ்சியிருக்கும் நிலத்திலேனும் நாம் ஆலயங்களை அமைத்தும் சடையம்மா சமாதியை புனரமைத்து போற்றி வணங்கவும் அனைத்து தரப்பும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளோம். இதற்கு அனுமதி கிடைக்கும் பட்சத்தில் எதிர் வரும் 6ஆம் திகதி அங்கே ஒரு லிங்கம் பிரதிஷ்டை செய்ய முடியும்" என்றார்.

கீரிமலை சிவன கோவில் உடைக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் செய்தியை வடமாகாண ஆளுநர் மற்றும் படைத்தரப்பு என்பன மறுக்கின்றனர். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனை மேற்கொண்டதாக தவறான புரிதலை ஏற்படுத்தும் வகையில் இந்த செய்தி ஊடகங்களில் வெளியாகியுள்ளன என்று அரச தரப்பு கூறுகிறது.

கோவில் இருந்த இடத்தில் ஜனாதிபதி மாளிகை கட்டப்படவில்லை எனவும் அதற்கு அருகில் தனியாரிடம் சுவீகரிக்கப்பட்டு அரசு உடமையாக்கப்பட்ட காணியிலே மாளிகை நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர்கள், 8 வருடங்களுக்கு முன்னரே மாளிகை நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கோவில் உடைக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் எந் உண்மையும் இல்லை என்கிறார். அதேபோல் வடபகுதிக்குப் பொறுப்பான கடற்படை கட்டளைத்தளபதி அட்மிரல் அருண தென்னகோன், மாளிகையின் சொத்துக்களின் பாதுகாப்பிற்காக கடற்படை அங்கு இருப்பதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழே இந்த பிரதேசம் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

கடற்படை பிரதான தளமும் இதற்கு அருகிலே இருப்பதாக குறிப்பிட்ட யாழ் இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சொர்ண போதொட்ட "குறித்த பிரதேசத்தில் ஜனாதிபதி மாளிகைக்கான தேவையொன்று இல்லை என்பதை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் அண்மையில் மேற்கொண்ட யாழ்ப்பாண விஜயத்தின்போது குறிப்பிட்டிருந்தார். இந்த மாளிகை சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் சிறந்த தரத்திலான ஹோட்டல் ஒன்றாக மாற்றியமைக்க வேண்டும் என்றும் அவர் யோசனை முன்வைத்திருந்தார்" என்றார்.

யாழ்ப்பாணம் முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் இந்த பிரதேசம் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது. இராணுவம் அங்கு எந்த வித நிர்மாணங்களை மேற்கொள்ளவோ அழிக்கவோ இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால், அங்கிருந்த சிவன் கோவில் இப்போது இல்லை என்பதை தெல்லிபளை பிரதேச செயலர் சிவசிறியும் உறுதிப்படுத்திகிறார்.

"அப்பகுதி ஒரேபற்றைகளால் நிறைந்த பகுதியாக காணப்படுகின்றது. இருந்தபோதும் கிருஸ்ணர் கோவிலிற்கு அருகே சிவன் கோவிலை காணவில்லை".

அரச தரப்பு சிவன் கோவில் இடிக்கப்படவில்லை என்றும், தமிழர் தரப்பு அது இடைக்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்த நிலையிலேயே சில நாட்களிற்கு முன்னர், ஆறு திருமுருகன் அங்கு சென்று பார்வையிட்டு வந்த பிறகு எம்முடன் பேசினார்.

அரச தரப்பு சிவன் கோவில் இடிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை கட்டப்படவில்லை என்று கூறுகிறார்களே தவிர, இருந்த சிவன் கோவில் என்னவாயிற்று என்பதற்கு பதிலளிக்கவில்லை. இது தமிழ் மக்களின் கலாசார மற்றும் மத நம்பிக்கையின் மீதான நேரடி தாக்குதல் என்று வட மாகாண தமிழ் மக்கள் கூறுகின்றனர்.

உரிய ஆவணங்கள் மற்றும் வரைபடங்கள் மூலம் அங்கு ஆலயம், மடம், சமாதி ஆகியவை இருந்ததற்கான ஆதாரங்கள் அளிக்கப்பட்ட பிறகும் அரசும் இராணுவத் தரப்பும் வெளிப்படையாக உண்மையை தெரிவிக்க மறுக்கின்றனர் என்கிறார்கள் யாழ் மக்கள்.

அரசு அப்படி ஏதும் நடைபெறவில்லை என்பதை மறுக்கும் போது, அங்கு ஆலயம் இருந்த இடத்தில் எதிர்வரும் பங்குனி உத்திர நாளன்று (ஏப்ரல் 6) ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பும் வகையில் அங்கு சிவ லிங்கத்தை பிரதிஷ்டை செய்ய கோரி விடுக்கப்பட்டுள்ள அனுமதியை அளிக்கலாமே என்று மக்கள் கேட்கும் கேள்விக்கு மௌனமே பதிலாக வருகிறது.

தமிழர்களின் வாழ்வுடன் உணர்வுபூர்வமாக கலந்துள்ள சிவநெறி மற்றும் வழிபாட்டு இடங்கள் காணாமல் ஆக்கப்படும் அதே வேளை, இந்தாண்டு வெசாக் திருவிழாவை மிகவும் சிறப்பாக நடத்திட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக அவரது அலுவலகம் கூறுகிறது.

"ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் பணிப்புரைக்கு அமைவாக இவ்வருட வெசாக் பண்டிகையை தேசிய மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் வெகு விமரிசையாகக் கொண்டாட திட்டமிட்டுள்ளது" என்று அவரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 05ஆம் திகதி முதல் 07 ஆம் திகதி வரை "புத்த ரஷ்மி தேசிய வெசாக் பண்டிகை" கொழும்பில் உள்ள கங்காராம விகாரை, ஜனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதமர் அலுவலக வளாகத்தில் நடைபெற உள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று பௌத்த குருமார்கள் கொழும்பில் தெரிவித்துள்ளனர்.



ஒரு புறம் சிவன் கோவில் இடிப்பு மறுபுறம் வெசாக் பண்டிகை சிறப்பாக கொண்டாட திட்டம், இது எப்படி தேசிய ஒற்றுமையை, ஒருங்கிணைப்பு ஆகியவற்றை வளர்க்கும் என்று நாட்டிலுள்ள தமிழ் மக்கள் கேட்பது எனது காதிலும் விழுகிறது.

# கிறிஸ்துவ போதகர் பால் தினகரன் இலங்கையில் மதப் பிரசாரத்தில் ஈடுபட அனுமதி மறுப்பு

- நடராசா லோகதயாளன்






இலங்கைக்கு வர்த்தக விசாவில் வருகை தந்த கிறிஸ்துவ் மத போதகர் பால் தினகரன் மதக் கூட்டம் நடாத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

பால் தினகரன் யாழ்ப்பாணத்தில் வியாழன் (23) முதல் மூன்று தினங்கள் மதக் கூட்டம நடாத்தவுள்ளதாக பகிரங்க துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டபோது யாழ்ப்பாணம் சிவசேனை அமைப்பின் சார்பில் இதற்கு எதிராக முறையீடு செய்யப்பட்டது.

வர்த்தக விசாவில் வருகை தரும் ஒருவர் மதப் பரப்புரையில் ஈடுபட முனைவதனால் இதனை தடுக்க வேண்டும் என அந்த முறையீட்டில் கோரப்பட்டது.

இந்த நிலையில் கொழும்பு மற்றும் கண்டியில் மதம் சார் நிகழ்வில் ஈடுபட்ட பால் தினகரன குழுவினர் வியாழன் மாலை 4 மணிக்கு தனியான விமானம் மூலம் இரத்மலான விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் வந்து இறங்கினார்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் வந்து இறங்கிய பால் தினகரன் குழுவினரை வெளியேற அனுமதிக்க முடியாது என குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டு அதிகாரிகள் தடை விதித்தனர்.






நீண்ட பேச்சுக்களின் பின்னர் வியாழன் இரவு 8 மணியளவில் அந்த குழுவினர் அனைவரின் கடவுச் சீட்டுக்களையும் பெற்றுக்கொண்டு யாழ் நகரில் உள்ள பிரபல நட்சத்திர கோட்டலில் தங்க அனுமதித்தோடு மதநிகழ்வுக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

கீழேயுள்ள அந்த குழுவினருக்கே அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

1. திருமதி. எவாஞ்சலின் பால் தினகரன் - இந்தியர்
2. திரு. சாமுவேல் பால் தினகரன் - அமெரிக்கர்
3. செல்வி. ஸ்டெல்லா இரமோலா தினகரன் - அமெரிக்கர்
4. செல்வி. யோகினி வசந்தகுமார் - இலங்கையர்
5. திரு. பால் தினகரன் - இந்தியர்
6. திரு. உலூக் பெர்னார்டர் யோர்ச்சர் - இந்தியன்
7. திரு. இரத்தினகுமார் ஆசீர்வதம் - இந்தியர்
8. திரு. இரெசி இடேனியல் பால்ராசர்- இந்தியன்.

இவர்கள் எண்மரும் பலாலி விமானம் நிலையம் வந்த உடனேயே கொழும்பில் இருந்து இந்தப் பணிக்காகவே விரைந்து வந்த இலங்கை அரசின் குடிவரவுத் திணைக்கள நடவடிக்கைக் குழு அவர்களை விமான நிலையத்தில் தனி அறைக்கு அழைத்துச் சென்றனர் என்று உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களின் கடவுச் சீட்டுகளைக் கைப்பற்றிய குடிவரவுத் திணைக்கள அலுவலர்கள், வெள்ளிக்கிழமை 24.03.2023 காலை 1000 மணிக்குக் கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு திணைக்கள அலுவலகத்திற்கு நேரே வருமாறு ஆணையிட்டுச் சென்றதாக கூறப்படுகிறது.




# ஈழத்துத் திருக்கோயில்கள் 1041



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரசுவாமி ஆலயம் முகத்துவாரம், கொழும்பு

*"சித்தர் என்றும் சிறியர் என்றும் அறியொணாத சீவர்காள்!*
*சித்தர் இங்கு இருந்தபோது பித்தர் என்று எண்ணுவீர்!*
*சித்தர் இங்கு இருந்தும் என்ன பித்தன் நாட்டிருப்பாரோ?*
*அத்தன் நாடும் இந்தநாடும் அவர்களுக்கெலா மான்றே."*

உலகில் தோன்றியுள்ள தொன்மையான சமயங்களுள் சைவசமயமும் ஒன்றாகும். பழமையும் பெருமையும், வளமான இலக்கியங்களும், செறிவான ஆராய்ச்சி நூல்களும், சைவசமயத்தின் தொன்மையை பறைசாற்றுகின்றன. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்றார் திருமூலர். நம்முடைய உள்ளத்திலேயே இறைவன் குடிகொண்டு விளங்குகின்றான் என்பதை, அப்பர்பெருமானும் "காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக" எனக் கூறுகின்றார். இவ்வாறு அகத்தே குடியிருக்கும் இறைவன் புறத்தே கோயில் கொண்டு விளங்கும் இடமே திருக்கோயில் ஆகும்.

இத்தகைய திருக்கோயில்கள் அமைந்துள்ள இடத்தில் வாழ்வதே பெருமை என்பதை, "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" எனும் பழமொழிகள் வாயிலாக நம் முன்னோர்கள் உணர்த்தியுள்ளனர். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்தொழில்களைப் புரியும் எங்கும் நிறைந்த பரம்பொருளாம் இறைவன், ஆங்காங்கே கோயில்கொண்டு விளங்கும் மூர்த்திகளில் அருள்பாலிக்கின்றார். இறைவன் சகல உயிரினங்களுக்கும் அருள்பாலிக்கும் இடமே திருக்கோயில் ஆகும்.

இவ்வாறான திருக்கோயில்கள் ஈழமெங்கும் காணப்படுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ஈழத்திலுள்ள பஞ்சஈஸ்வரங்கள் இந்துசமயத்தின் தொன்மைக்குச் சான்றாகக் காணப்படுகின்றன. இவ்வாறான சிவாலங்கள் பலவாக இருந்தபோதிலும் இலங்கையின் தலைநகரான கொழும்பில் பல்லினமக்களும் வாழும் சூழலில் முகத்துவாரம் பகுதியில் அமைந்துள்ள அருணாசலேஸ்வரர்சுவாமி ஆலயமும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாலயம் கடலொடுகூடிய சூழலில் அமைந்து அருளாட்சி புரிகின்றது.

இவ்வாலயம் சித்தர்பெருமானாகிய பெரிய ஆனைக்குட்டிச் சுவாமியார் என்ற மகானோடு தொடர்புபட்டுள்ளது. இந்தச் சித்தர்பெருமான் சமாதியடைந்தபின் அவர் நினைவாக, சேர். பொன் அருணாசலம் மற்றும் அவரது துணைவியார் திருமதி. சுவர்ணாம்பிகை அம்மையார், இருவரதும் பெருமுயற்சியால் கொழும்பு முகத்துவாரம் சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வர சுவாமி ஆலயம் நிறுவப்பட்டது. இந்தியாவிலுள்ள பிரயாகையிலிருந்து மகரிஷி ஒருவர் வணங்கி வழிபாடியற்றிய அழகிய பாணலிங்கத்தையும், நந்தியையும் இங்கு கொண்டுவந்து எழுதருளச்செய்து குடமுழுக்கு இடம்பெற்றுள்ளது.

தொன்மைமிக்க சமயமாகிய இந்துசமயத்திலே பக்தர்கள், சித்தர்கள், ஞானிகள் என மூன்றுநிலையினர் காணப்படுகின்றனர். இறைவனை வாயார வாழ்த்தி, மனமாரக்கும்பிட்டு பணிந்து வணங்குவோர், பக்தர்களாக விளங்கினர். சீவனுக்குள் சிவனைக் கண்டு நற்குருவைப் பெற்றுக் காணப்பட்டோர், ஞானிகளாக விளங்கினர். அட்டமா சித்திகளைச் செய்து அருள்விளையாட்டுக்களைக் காட்டியோராக சித்தர்கள் காணப்பட்டனர். சித்தர்கள் என்ற சொல்லுக்கு, சித்தி பெற்றவர்கள் என்பது பொருள். அதாவது வீடுபேறு பெற்றவர்கள் என இவர்களைக் கொள்ளலாம். இவ்வாறான சித்தர்கள் ஈழத்திருநாட்டிலும் வாழ்ந்துள்ளனர். கடையிற்சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்றோரோடு இன்னும் பலரும் வாழ்ந்து சித்தர் பாரம்பரியத்தை செழிக்கச் செய்துள்ளனர். இவர்களுள் பெரியானைக்குட்டிச் சுவாமியாரும் குறிப்பிடத்தக்கவர்.

ஈழவளநாட்டில் இயற்கைஅழகொடு விளங்கும் கண்டிமாநகரில் பெரியானைக் குட்டிச் சுவாமிகள் வாழ்ந்துள்ளார்கள். சிறுபையனாக இருந்தகாலத்தில் கண்டிவீதிகளில் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தார். கண்டி தெப்பக்குளத்திற்குப் பக்கத்தில் சலவைத் தொழிலாளி ஒருவர் வசித்து வந்தார். வீதிவழியே தினமும் திரியும் சிறுவனை தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். சிறுவனின் நற்குணங்களை கண்டு வியப்படைந்த சலவைத்தொழிலாளி தமது மகனாக அவரைப் பேணி வந்தார். சிறுபையனாக இருந்தபோதிலும் பெரிய ஆனைக்குட்டிச்சுவாமிகள் வளர்ப்புத்தந்தையினுடைய தொழிலுக்குப் பேருதவியாக இருந்தார். ஆனைக்குட்டி என்ற பெயர் வளர்ப்புத் தந்தையால் இடப்பெற்ற பெயராகும்.


சிறுவயதில் ஒருநாள் கொல்லைப்பக்கம் சென்ற ஆனைக்குட்டிச் சுவாமிகள் "அம்மா அம்மா பாம்பு" எனச் சத்தமிட்டார். வளர்ப்புத்தாயார் ஓடிச்சென்று பார்த்தபொழுது கைகொட்டிச் சிரித்தார். இவ்வாறு மற்றுமொருநாளும் இவ்வேலை இடம்பெற்றது. மூன்றாவது முறை பாம்பு பாம்பு எனக் கூவியபொழுது எவரும் சென்று பார்க்கவில்லை. கொல்லைப்பக்கம் சென்ற ஆனைக்குட்டியைக் காணவில்லை என சென்ற பெற்றோர் அங்கு அவரைக் காணாது தவித்தனர். ஆனால் அவர் மலங் கழித்த இடம் தங்கக் குவியலாக இருப்பதைக் கண்டு அவற்றை எடுத்து பாதுகாப்பாக வைத்துவிட்டு, பலஇடங்களிலும் தேடியபொழுது, ஸ்ரீ கதிரேசன் ஆலய படியில் ஆனைக்குட்டி படுத்திருப்பதைக் கண்டனர். அவரை மீண்டும் வீட்டிற்கு வருமாறு வருந்தி அழைத்தனர்.

முற்பிறவியிலே உங்களுக்குத் தரவேண்டிய கடன் பாக்கி இருந்தது. அது நிறைவேறிவிட்டது. இப்பொழுது நீங்கள் யாரோ? நான் யாரோ? என்று அமைதியாகக் கூறிவிட்டு மௌனத்தில் ஆழ்ந்தார். நடைபெற்ற விடயங்களைக் கவனித்துக்கொண்டிருந்த கோயில் குருக்கள் ஆனைக்குட்டியின் வளர்ப்புப் பெற்றோரைப் பார்த்து, "இச்சிறுவனுக்கு மூளைக்கோளாறு போலத் தெரிகிறது பேசாமல் வீட்டிற்குச் சென்று விடுங்கள்" என்று கூறினார். பாம்பு பாம்பு என ஆனைக்குட்டி தொடர்பில்லாமல் கூப்பிட்ட செய்தி நினைவிலாட, தாங்கொணாத் துயரோடு வீட்டிற்குத் திரும்பினர்.

**- வளரும்...**



# சிங்கள – பவுத்தம் & சிறிலங்காவின் தேசிய அரசும்



லூசியன் அருள்ப்பிரகாசம்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

**சிங்கள பவுத்த மேலாதிக்கத்திற்கான நிபந்தனைகளை உருவாக்குதல்**

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு வெளியேறும் அவசரத்தில், பிரித்தானியர்கள் இலங்கையில் ஒரு தேசிய அரசை விட்டுச் செல்கிறோம் என்று நம்ப விரும்பினர். அவ்வாறு செய்ய அவர்கள் வேண்டுமென்றே தங்கள் வரலாற்றைத் தவறாகப் புரிந்து கொண்டனர்.

இரண்டாவதாக, பிரித்தானியர் (மற்றும் பிரெஞ்சுக்காரர்களும்) ஒரு ஒற்றையாட்சி அரசை விட்டுச் சென்றனர், அதை அவர்கள் மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு மற்றும் நிர்வாக வசதிக்காக விரும்பினர். மறுபுறம், நாம் அமெரிக்க செல்வாக்கின் கீழ் இருந்திருந்தால், இலத்தீன் அமெரிக்காவில் உள்ள சில நாடுகள் செய்ததைப் போலவே, நாம் இன்னும் அதிக அரசியல் பகிரப்பட்ட அரசியலமைப்பை - அல்லது கூட்டாட்சி அரசியலமைப்பைப் பெற்றிருப்போம்.

மூன்றாவதாக, பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரர்களும் தாங்களாகவே வடிவமைத்த நாடாளுமன்ற அரசியலமைப்பை விட்டுச் சென்றனர். இலங்கையில், பெரும்பான்மை சிங்கள-பவுத்தர்கள் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றுவதற்கும், சிங்கள மட்டும் சட்டம் (1956) மூலம் நாட்டைப் பிளவுபடுத்துவதற்கும் சிறிது காலமே தேவைப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1972 இல் இயற்றப்பட்ட அரசியலமைப்பின் படி அங்கு சிங்களவர்கள் நிரந்தர மற்றும் ஏகபோக பெரும்பான்மையைக் கொண்டிருந்த நாடாளுமன்றத்துக்கு இறையாண்மை பாரப்படுத்தப் பட்டது.

நான்காவதாக, பிரித்தானிய அரசியலமைப்பில் உரிமைகள் சட்டவரைவு **(Bill of Rights)** இல்லை. எது எவ்வாறிருப்பினும், எமது அரசியலமைப்பின் கீழ் சிறுபான்மையினருக்கான பாதுகாப்புக்கள் நாடாளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மையால் இரத்து செய்யப்படலாம். இது சிங்கள பவுத்த கூச்சலை எழுப்புவதன் மூலம் (தமிழர்களை) எப்போதும் ஏமாற்ற முடியும். கூடுதலாக ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறை மூலம் இன்னும் அதிகமாக சாதிக்க முடியும் என்றால் அரசியலமைப்புப் பாதுகாப்புகளால் என்ன பயன்?

**இறுதியாக பிரித்தானியர் ஒரு ஒற்றையாட்சியின் எல்லைகளை உருவாக்கினர்.**

நமது அரசமைப்புச் சட்டத்தில் உள்ள மேற்குறிப்பிட்ட பாதிப்புகளை தேர்தல் பெரும்பான்மையினர் (சிங்களவர்) பயன்படுத்தி அரசின் தன்மையை அதன் சொந்தப் படிமத்திற்கு (மட்டும்) ஏற்ப மாற்றியுள்ளனர். இது இலங்கை தேசத்தை இன மற்றும் மத அடிப்படையில் பிளவுபடுத்தும் விளைவை ஏற்படுத்தியுள்ளது.

**"தேர்தல் ஜனநாயகம்"**

எமது அரசியலமைப்பு யாப்புகள் அனைத்தும் ஜனநாயக நடைமுறையால் எழும் எந்தவொரு வகுப்புவாத வேறுபாடுகளையும் தீர்க்க முடியும் என்று மறைமுகமாகக் கருதின. மாறாக, ஒவ்வொரு பொதுத் தேர்தலும் நமது சமூக வேறுபாடுகளை அதிகப்படுத்தியுள்ளது. எதிர்பாராதவிதமாக, நாம் தேர்தல் ஜனநாயகத்தை மட்டுமே அடைந்துள்ளோம் - மீதமுள்ள ஜனநாயகத்தை அல்ல.

அண்மையில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகளின் பயனற்ற தன்மை உறுதிப்படுத்தப்பட்டது. அங்கு அனைத்து சிறுபான்மையினரும் அவருக்கு எதிராக வாக்களித்த போதிலும், ஜனாதிபதி கோட்டாபய தேர்ந்தெடுக்கப் பட்டார். எனவே சிறுபான்மையினர் வாக்களித்தாலும் சபிக்கப்படுவார்கள், வாக்களிக்கவில்லை என்றாலும் ஊழ்வழிப் பழிகேட்டுக்கு ஆளாவார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பு முடிவுகள், எமது தீவில் வாழும் இரு தேசிய இனங்களுக்கிடையிலான பிரிவை உறுதியாகக் காட்டியது. இது தற்செயலான நிகழ்வு அல்ல. உண்மையில், கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் பிரபாகரன் நாட்டைப் பிளவுபடுத்த விரும்பிய அதே வழியில் இருந்தது. வடக்கும் கிழக்கும் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிராக உறுதியுடன் வாக்களித்தன. இது தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினர் 75 ஆண்டுகளுக்கு மேலாக ஒற்றையாட்சியில் சிங்களவர்களுடன் இணைந்து வாழ்ந்த போதிலும் அவர்கள் சிங்கள ஆட்சியின் கீழ் வாழ விரும்பவில்லை என்பதையும் காட்டுகிறது.

நியாயமாகச் சொல்வதானால், மேற்கூறிய அனைத்திற்கும் நேர்மாறாக வாதிடலாம். தற்செயலாக தமிழர்கள் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றிருந்தால், சிங்களவர்கள் செய்வதைப் போலவே அவர்களும் செய்திருப்பார்கள்: அனைத்து அதிகாரங்களையும் தங்களுக்குள் குவித்து, அரசையும் அவர்களைப் போலவே தோற்றமளிக்கச் செய்திருப்பார்கள். எனவே, இது ஒரு வகுப்புவாதப் சிக்கல் மட்டுமல்ல, அரசியலமைப்புச் சிக்கலும் கூட.



**நமது 'தேசிய அரசில்' வெவ்வேறு நாடுகள்**

தாங்கள் சிறுபான்மையினரிடமிருந்து வேறுபட்ட இனம், மதம், மொழி, கலாச்சாரம், பழங்கால பவுத்த பாரம்பரியம் கொண்ட இனம், வேறு தேசம் என்று முதலில் கூறிக் கொண்டவர்கள் சிங்களவர்களே. சிங்கள பவுத்த தேசியவாதத்தின் அரசியல் ஆதிக்கம் மூன்று கட்டங்களாக முன்னேறியுள்ளது. முதலாவது சிங்கள பவுத்த தேசியவாதத்தை இலங்கைத் தேசியவாதத்துடன் சமன்படுத்துவது. இரண்டாவது கட்டம் சிங்கள பவுத்த தேசியவாதத்தை இலங்கை அரசுடன் சமன்படுத்துவது. மூன்றாவது கட்டம் சிங்கள பவுத்தம், தமிழ் பேசும் வடக்கு, கிழக்கைக் கைப்பற்றுவதற்கு அரசின் பெயரால் செயற்படுவது. இதன் விளைவாக, ஆக்கிரமிப்பு இராணுவம் வேறு இனத்தைச் சேர்ந்தது என்று பெருமைப்பட்டுக் கொள்கிறது. அது ஆளப்படுவோரின் மொழியைப் (தமிழை) பேசுவதில்லை, அவர்களின் மதத்தைப் பின்பற்றுவதில்லை, ஆளப்படுபவர்களின் விருப்பத்திற்கு எதிராக ஆட்சி செய்யும் ஆக்கிரமிப்புப் படை உருவாகியிருக்கிறது. வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்களின் வாழ்வில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பலவற்றை விட்டுக்கொடுத்த தனிப்பட்ட சிங்களவர்களும் இருக்கிறார்கள் என்பது உண்மைதான்.




இலங்கையில் சிங்கள - பவுத்த தேசம் மட்டுமல்ல, சிங்கள மக்களிடமிருந்து இனம், மதம், மொழி மற்றும் கலாசாரம் வேறுபாடுகளைக் கொண்ட இலங்கைத் தமிழ்த் தேசமும் இருப்பதுதான் சிக்கல். இந்த இலங்கைத் தமிழ்த் தேசியம் 25 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த போரினால் வலுப்படுத்தப்பட்டுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்க சிங்களப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள்ளேயே (தமிழ் நா.உறுப்பினர்கள் எப்போதும் (சிங்களவர்களது) வாக்குப் பலத்தால் தோற்கடிக்கப்படுவார்கள்) அனுமதிக்கும் அரசியலமைப்பு முறைமையினால் ஆளப்படுவதை தமிழர்கள் விரும்பவில்லை. கிழக்கு மாகாணத்தில் தனித்துவமான மதம் மற்றும் கலாச்சாரம் கொண்ட அதிக அளவிலான முஸ்லிம் சமூகமும் உள்ளது. புலிகளினால் வெட்கக்கேடான முறையில் பாதிக்கப்பட்ட இந்த சமூகம், இப்போது சிங்கள - பவுத்த தேசியவாதத்தின் தாக்குதலை உணர்ந்துள்ளது. இலங்கையின் சோகம் என்னவென்றால், நமது பன்முக சமூகத்தின் யதார்த்தத்தை மறுப்பதும் - இந்த வேறுபாடுகளை இராணுவ வலிமை மூலமோ அல்லது கும்பல் வன்முறையால் தீர்க்க முடியும் என்று நினைப்பதுதான். அறகலய (போராட்டம்) இப்போது முடிந்துவிட்டது. சிங்களவர், தமிழர் அல்லது முஸ்லிம் என்ற வகையில் நமது தனி வகுப்புவாத அடையாளங்களுக்குள் மீண்டும் அடியெடுத்து வைக்க வேண்டிய தருணம் இது!

**சிங்கள-பவுத்த மேலாதிக்கத்தின் கொள்கைகள் மற்றும் அரசியல்**



அஸ்கிரியா மற்றும் மல்வத்த பவுத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் அதிகாரப் பகிர்வுக்கான எந்தவொரு முயற்சியையும் தடை செய்துள்ளனர். இது வெறும் இனம் அல்லது அரசியல் அல்லது மதம் பேசுகிறதா? இவ்வாறு சிங்கள - பவுத்தத்தின் அரசியல் சித்தாந்தம் அரசியல் ரீதியாகவும், இன ரீதியாகவும், மத ரீதியாகவும் செயல்படுவதாகத் தெரிகிறது. மதகுருமார்களின் இப்படியான மக்கள் கவர்ச்சிக் கொள்கை, சர்வாதிகாரவாதம், இனவெறி மற்றும் வெளிப்படையான இராணுவவாதம் ஆகியவற்றின் கலவையானது இசுப்பானியா, இத்தாலி மற்றும் ஜெர்மனி நாடுகளில் இடம்பெற்ற பாசிசத்தின் எழுச்சி போன்றது.

சிங்கள அரசியல்வாதிகள் கூட்டாட்சி அல்லது அதிகாரப் பகிர்வை நிராகரிக்குமாறு சிங்களப் பெரும்பான்மையினரை நம்ப வைத்துள்ளனர். எவ்வாறாயினும், நமது ஒற்றையாட்சி அரசியலமைப்பு நாட்டைப் பிளவுபடுத்த மட்டுமே உதவியுள்ளது. போரால் இப்பகுதி 'ஒருங்கிணைந்த' போதிலும், மக்கள் முன் எப்பொழுதும் இல்லாதவாறு பிளவுபட்டுள்ளனர். இதுதான் நமது ஒற்றையாட்சி அரசியலமைப்பின் 75 ஆண்டுகள் கழிந்த நிலையில் கண்ட பலன்!

ஜனநாயகத்தின் கீழ் நாட்டை ஒன்றாக வைத்திருப்பதற்கான ஒரே வழி அதிகாரப் பகிர்வு அல்லது கூட்டாச்சி முறை மட்டுமே. அப்படி இராணுவம் ஒன்றாக வைத்திருக்க முடியும் - ஆனால் எவ்வளவு காலத்துக்கு? இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் உரிமையை சிங்கள மக்களுக்குக் கடவுள் கொடுக்கவில்லை என்பதே இக்கட்டுரையின் முழு வாதமாகும். பிரித்தானியர் தங்களிடம் விட்டுச்சென்ற அதிகாரம், சுதந்திரத்தின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதியைக் காட்டிக் கொடுத்ததன் மூலம், அண்மைக் காலத்தில் உள்நாட்டுப் போரில் வெற்றி பெற்றதன் மூலம் - அரசின் உள் மற்றும் வெளி வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மட்டுமே அவர்களுக்கு இந்த அதிகாரம் உள்ளது.

மூன்று சாத்தியக் கூறுகள் மட்டுமே எஞ்சியுள்ளன:

1. இலங்கை தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒரு சுதந்திர நாடு.

2. ஒரு அதிகாரப் பகிர்வு அல்லது கூட்டாட்சி அரசு: இந்த விருப்பம் நாடு ஒரு ஜனநாயக நாடாகப் பிழைப்பதற்குக் கிடைத்திருக்கும் கடைசி வாய்ப்பாகும்.

3. வடக்கிலும் கிழக்கிலும் அங்கு வாழும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக சிங்கள இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு, ஆட்சி செய்யும் ஒரு கொலனி ஆகும். சிங்கள மக்களின் நோக்கம் இதுவல்ல என்பதை நாம் அறிவோம். ஆனால் அதுதான் களத்தில் உள்ள யதார்த்தம் ஆகும்.

முதல் இரண்டு மாற்று வழிகள் நிராகரிக்கப்பட்டால், கடைசி மாற்று வழி மட்டுமே எஞ்சியுள்ளது. அது வேறு இனத்தைச் சேர்ந்தவன் என்று பெருமைப்பட்டுக் கொள்ளும், (தமிழ்) மக்களின் மொழியைப் பேசாத, தன் மதத்தைப் பின்பற்றாத, மக்களின் விருப்பத்திற்கு எதிராக ஆட்சி செய்யும் ஒரு இராணுவம் - உண்மையில் ஒரு 'கொலனி' என்பதன் வரையறை. சிங்கள பவுத்த அரசு வேண்டும் என்ற அதன் வேட்கை இனவாத, குறுங்குழுவாத, எதேச்சதிகார, இராணுவ-வாத, நிரந்தர மற்றும் ஊழல் நிறைந்த ஒரு அரசை உருவாக்கியுள்ளது என்பதை வாக்காளர்களில் பெரும்பான்மையினர் - அறகலய இருந்தாலும் - கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த முடிவுக்கு எதிராக வாக்களித்த இலங்கைத் தமிழர்கள், கட்டுப்பாட்டை மீறிச் சுழன்று கொண்டிருக்கும் ஒரு அரசில், சிங்களவர்களுடனான அதே கொலனித்துவக் கூண்டில் சிக்கித் தவிக்கின்றனர். *(நிறைவு)*

(ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்தக் கட்டுரை **Colombo Telegraph** என்ற இணையதளத்தில் வெளிவந்தது. அதனை **https://www.colombotelegraph.com/index.php/sinhala-buddhism-the-nation-state-of-sri-lanka/** என்ற இணைய முகவரியில் படித்துக்கொள்ளலாம்)

*தமிழாக்கம்: கனடா நக்கீரன்*

Tasty தமிழா (TM)

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...


பனை வெல்லம்


தேன் நெல்லி

மரச்செக்கு எண்ணெய்கள்


சுக்கு மல்லி காபி தூள்

யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்

*Tasty* தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

*MAHAANS PICK & PRESS OIL MILL INC*
*Organic Bulk Store & Water Filling Station*
*5635 Finch Ave East,*
*Unit 5, Scarborough M1B 5K9.*

Call: 416 293 4010

MAHAANS PICK & PRESS OIL MILL INC



# MONEY PROBLEMS?

## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0% வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, மிசிசாகா, றிச்மோன்ட்கில், வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# பிரதமர் மோடியை அவதூறாக பேசிய வழக்கு: ராகுல் காந்திக்கு 2 ஆண்டு சிறை

பிரதமர் மோடியை அவதூறாகப் பேசிய வழக்கில், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து குஜராத்தின் சூரத் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது.கடந்த மக்களவைத் தேர்தலின்போது, கர்நாடகாவின் கோலார் பகுதியில் 2019 ஏப்ரல் 13ம் தேதி நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, “ஏன் அனைத்து திருடர்களும் மோடி என்ற குடும்பப் பெயரையே கொண்டுள்ளனர். நீரவ் மோடி, லலித் மோடி, நரேந்திர மோடி என்று எல்லா திருடர்களின் பெயர்களும் மோடி என்றே முடிவது ஏன்?” என்று விமர்சித்தார்.இது தொடர்பாக குஜராத்தை சேர்ந்த பாஜக எம்எல்ஏ பூர்னேஷ் மோடி, சூரத் தலைமை நீதித் துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ராகுல் காந்தி மீது அவதூறு வழக்குத் தொடர்ந்தார். இந்திய குற்றவியல் சட்டம் 499, 500 ஆகிய பிரிவுகளின் கீழ் ராகுல் காந்தி மீது விசாரணை நடைபெற்றது.

2021 ஜூன் மாதம் ராகுல் காந்தி நீதிமன்றத்தில் ஆஜராகி, விளக்கம் அளித்தார்.சுமார் 4 ஆண்டுகள் நீடித்த இந்த வழக்கில் கடந்த 17ம் தேதி இருதரப்பு வாதங்கள் நிறைவடைந்து, தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. மார்ச் 23ம் தேதி தீர்ப்பு வழங்கப்படும் என்று மாஜிஸ்திரேட் எச்.எச். வர்மா அறிவித்திருந்தார். இதையடுத்து, ராகுல் காந்தி உள்ளிட்டோர் சூரத் தலைமை நீதித் துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகினர். அனைத்துத் தரப்பினரும் ஆஜரான நிலையில் தீர்ப்பை வாசித்த மாஜிஸ்திரேட் வர்மா, காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி குற்றவாளி என்று தீர்ப்பளித்தார்.தொடர்ந்து மனுதாரர் பூர்னேஷ் மோடி தரப்பு வழக்கறிஞர் கூறும்போது, “சட்டங்களை இயற்றும் மக்களவையின் எம்.பி.யாக ராகுல் காந்தி உள்ளார். அவருக்கு சட்ட விதிகள் அனைத்தும் தெரியும். அவரே விதிகளை மீறியுள்ளார். அவருக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும். இந்த தண்டனை மற்றவர்களுக்கு ஒரு பாடமாக



அமைய வேண்டும்‘‘ என்றார்.ராகுல் காந்தி தரப்பு வழக்கறிஞர்கள் வாதாடும்போது, “வழக்கில் மன்னிப்பு கோர விரும்பவில்லை.

ராகுல் காந்தி ஊழலுக்கு எதிராகவே பேசினார். அவர் தனது கடமையை மட்டுமே செய்தார்” என்றனர்.ராகுலுக்கு 30 நாட்கள் ஜாமீன்: இருதரப்பு வாதங்களையும் கேட்ட மாஜிஸ்திரேட் வர்மா, ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.15,000 அபராதமும் விதித்தார். இதையடுத்து, ராகுல் காந்தி தரப்பில் ஜாமீன் கோரப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட மாஜிஸ்திரேட் வர்மா, அவருக்கு 30 நாள் ஜாமீன் வழங்கி, அதுவரை தண்டனையை நிறுத்திவைக்க உத்தரவிட்டார்.ராகுல் காந்தியின் வழக்கறிஞர் பாபு கூறும்போது, “இந்த தீர்ப்பை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வோம். நீதித் துறையின் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது” என்றார்.

ராகுல் காந்தி தனது ட்விட்டர் பதிவில், “எனது மதம் உண்மை, அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது. உண்மையே எனது கடவுள். அகிம்சை அதை அடையும் வழி. இது காந்தியடிகளின் பொன் மொழி” என்று தெரிவித்துள்ளார்.எம்.பி. பதவி பறிபோகுமா?: உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, குற்றவியல் வழக்கில் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ராகுல் காந்தியின் எம்.பி. பதவி பறிபோகும் அபாயம் உள்ளது.சூரத் நீதிமன்றம் அவருக்கு விதித்த தண்டனையை ஒரு மாதத்துக்கு மட்டும் நிறுத்தி வைத்துள்ளது. தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய அவரது தரப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தின் முடிவைப் பொறுத்தே, ராகுல் காந்தியின் எம்.பி. பதவி தப்புமா, பறிபோகுமா என்பது தெரியவரும்.இது தொடர்பாக பாஜகவினர் கூறும்போது, “வழக்கறிஞர் லில்லி தாமஸ் தொடர்ந்த வழக்கில், 2013 ஜூலை 10ம் தேதி உச்ச நீதிமன்றம் முக்கிய தீர்ப்பை வழங்கியது. இதன்படி, குற்றவியல் வழக்கில் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட எம்.பி., எம்எல்ஏக்களை தீர்ப்பு வெளியான நாளில் இருந்தே பதவி நீக்கம் செய்யலாம்.உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, ஆசம் கான் உள்ளிட்டோர் தீர்ப்பு வெளியான நாளே பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

அந்த வகையில், ராகுல் காந்தியின் எம்.பி. பதவியை உடனடியாகப் பறிக்க வேண்டும்‘‘ என்றனர்.முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் குரேஷி கூறும்போது, “சூரத் நீதிமன்றத் தீர்ப்பின்படி ராகுல் காந்தியை பதவி நீக்கம் செய்யக் கோரி மக்களவைத் தலைவரிடம் மனு அளிக்கலாம். அவர் தேர்தல் ஆணையத்துக்குப் பரிந்துரை செய்வார். இதையடுத்து, ராகுல் காந்தியின் வயநாடு மக்களவைத் தொகுதி காலியாக இருப்பதாக அறிவிக்கப்படும். ராகுல் மீதான தீர்ப்புக்கு தடை விதிக்கப்பட்டால் மட்டுமே, அவரது எம்.பி. பதவி தப்பும்‘‘ என்றார்.இந்த விவகாரம் குறித்து சட்ட நிபுணர்கள் கூறும்போது, “ராகுல் வழக்கில், அவர் உச்ச நீதிமன்றம் வரை மேல்முறையீடு செய்ய முடியும். ஒருவேளை உச்ச நீதிமன்றமும் அவர் குற்றவாளி என்று தீர்ப்பளித்தால், கண்டிப்பாக 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும். அவர் விடுதலையான நாள் முதல் 6 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது” என்றனர்.

# தமிழகத்தில் தகுதிவாய்ந்த குடும்பத் தலைவிகளுக்கு செப்.15 முதல் ரூ.1000 உரிமைத் தொகை: தமிழ்நாடு பட்ஜெட் 2023ல் அறிவிப்பு



வரும் செப்டம்பர் 15 முதல் தகுதிவாய்ந்த குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் ரூ.1000 உரிமைத் தொகை வழங்கப்பட இருக்கிறது என்று பட்ஜெட்டில் தமிழக நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் 202324ம் நிதியாண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இது, திமுக அரசின் 2வது முழுமையான பட்ஜெட். 202324ம் நிதி ஆண்டுக்கான இந்த பொது பட்ஜெட்டை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் இன்று காலை 10 மணிக்கு இபட்ஜெட்டாக தாக்கல் செய்து, பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறித்த அறிவிப்புகளை வெளியிட்டார். மகளிர் உரிமைத் தொகை தொடர்பாக அவர் பட்ஜெட் உரையில் இடம்பெற்ற விவரம்: “மகளிருக்கு சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடும் அளித்தது முதல், இன்று அவர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறோம்.

அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கப்படும் என்று நாங்கள் தேர்தல் அறிக்கையில், வாக்குறுதி அளித்துள்ளோம். மக்களைத் தேடி மருத்துவம், புதுமைப்பெண், நான் முதல்வன் போன்றவை தேர்தல் அறிக்கையில் செல்லப்படாதவை. இத்தகைய புதுமையான திட்டங்களை செயல்படுத்தியுள்ள முதல்வர், மகளிருக்கு உரிமைத் தொகை தரப்படும் என்ற இந்த வாக்குறுதியையும் நிறைவேற்றிட வேண்டும் என்று தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறார். அதன் அடிப்படையில், தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் 1000 ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்பட இருக்கிறது.

மத்திய அரசால் பெருமளவு உயர்த்தப்பட்டுள்ள சமையல் எரிவாயு விலை, விலைவாசி உயர்வால் அதிகரிக்கும் குடும்பச் செலவுகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு மாதம்தோறும் 1000 ரூபாய் என்பது அவர்களது அன்றாட வாழ்க்கைக்குப் பேருதவியாக இருக்கும். சிறப்புமிக்க இந்த திட்டம் கலைஞரின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் என சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15ம் நாள் முதல் இத்திட்டம் முதல்வரால் தொடங்கிவைக்கப்பட இருக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் மகளிர் பயன்பெறுவதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டு விரைவில் வெளியிடப்படும். தமிழ்நாடு மகளிரின் சமூக பொருளாதார வாழ்வில் ஒரு புரட்சியை ஏற்படுத்தக்கூடிய இத்திட்டத்திற்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் 7,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது” என்று அவர் கூறினார்.

# காதல் திருமணத்திற்கு எதிரான ஆணவக் கொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் இயற்றுக: சீமான்



“காதல் திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்படும் ஆணவக்கொலைக் குற்றங்களுக்கு எதிராக தனிச்சட்டமியற்ற வேண்டும்‘‘ என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கிருஷ்ணகிரியில் காதல் திருமணம் செய்து கொண்டதற்காக பெண்ணின் வீட்டாரால் ஜெகன் எனும் இளைஞர் நடுச்சாலையில் கழுத்தை அறுத்துக் கொலை செய்யப்பட்ட செய்தி பேரதிர்ச்சி தருகிறது.

நாகரிகம் பெற்று குடிமைச்சமூகமாக வாழ்ந்து வரும் தற்காலத்திலும் காதல் திருமணத்திற்கு எதிர்ப்பென்ற பெயரில் அரங்கேற்றப்படும் ஆணவப்படுகொலைகள் ஒட்டுமொத்தசமூகத்தையும் வெட்கித் தலைகுனியச் செய்கிறது.ஜெகனும், அவரது இணையரான சரண்யாவும் உறவினர்கள் என்றபோதிலும், காதல் திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட இப்பச்சைப்படுகொலையை ஒருநாளும் சகிக்க முடியாது.

மனித மனங்கள் ஒன்றுபட்டு, மனமொத்து செய்கிற திருமணத்திற்கு சாதி, மதம், வர்க்கம் என எந்தவொரு காரணியைக் காட்டியும் எதிர்ப்புத் தெரிவிப்பதென்பது மனிதத்தன்மையே அற்ற கொடுங் செயலாகும். அதனை வன்மையாக எதிர்க்கிறேன். ஆகவே, தம்பி ஜெகனைப் படுகொலை செய்த கொலையாளிகளை உடனடியாகக் கைதுசெய்து சிறைப்படுத்தி, அவர்களுக்குக் கடும் தண்டனை கிடைப்பதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், காதல் திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்படும் ஆணவக்கொலைக் குற்றங்களுக்கு எதிராகத் தனிச்சட்டமியற்ற வேண்டுமெனவும் தமிழ்நாடு அரசை நாம் தமிழர் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்” இவ்வாறு அவர் கூறியுள்ளார்.






கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE
FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இவ்வார ராசிபலன்

**24-03-2023 வெள்ளி தொடக்கம் 30-03-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** உயரங்களை சந்திக்கும் வாரம். குதூகலம் தாண்டவமாடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்கள செய்தி வரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். திறமைகள் வெளிப்படும். செல்வாக்கு மேம்படம். காதலர்கள் தம்பதியாவார்கள். சுபச்செலவு அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. வீண் சஞ்சலங்கள் விலகும். வேண்டாத கவலைகள் விலகும். முயற்சிகள் பலன் கொடுக்கும். நினைத்த விஷயம் நிறைவேறும். கடன் பாக்கிகள் வசூலாகும். திருமண தீபம் சுடர்விடும். பொருளாதாரம் மேம்படும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். எதிலும் வெற்றி கிட்டும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். குடும்பத்தில் குதூ கலம் ஏற்படும். வேண்டாத நபர்களின் பேச்சை குறைக்கவும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடி பொருட்கள் சேதமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கௌரவத்தில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிட்டும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். வீண் செலவுகளை தவிர்ப்பது நல்லது. எதிரிகளால் ஏற்றம் உண்டு. உத்தியோக உயர்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வேலவப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,H




**ரிஷபம்:** கட்டுமானப் பணியில் கௌரவம் உயரும் வாரம். ஆசைகள் நிறைவேறும். காரிய தாமதம் ஏற்படும். இடமாற்றம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். தொழில் வளம் கூடும். சொத்துக்கள் சேரும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உடல்நலம் சீராகும். விரோதங்கள் விலகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் பெரிய பலனை அடைவீர். உலோகத்தொழில் உயர்வு தரும். உறவினர் வருகையால் பலன் உண்டு. கல்விச்செலவு உண்டு. நண்பர்கள் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். பொருளாதாரம் முன்னேற்றம் மேம்படும். பாராட்டுக்கள் குவியும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். திடீர் மாற்றம் ஏற்படும். உடல் சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். முகப்பொலிவு கூடும். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவார்கள். சமூக சேவை செய்ய முன் வருவார்கள். மருத்துவத்துறையில் ஆர்வம் கொள்வீர்கள். காதலில் புத்துணர்வு இருக்கும். வியாபாரம் வளர்ச்சி தரும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கடன் சுமை தீரும். வாய்ச்சொல் பலன் தரும். வருமானத் தடை உண்டு. வாகனச் செலவு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 3,5,9,7
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,B




**மிதுனம்:** தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் வாரம். அலுவலகங்களில் பாராட்டுக்கள் குவியும். பயணத்தால் நல்ல பயன் கிடைக்கும். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பழிச்சொல்லில் இருந்து விடுபடுவீர்கள். பாக்கிகள் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் வசூலாகும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். புதிய பொருள் சேரும். பூமியால் லாபம் அடைவீர்கள். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். சட்டம் சாதகமாகும். திட்டங்கள் நிறைவேறும். வெற்றி சீக்கிரம் கிட்டும். பயணத்தினால் அனுகூலம் உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அமையும். ஆண்களின் ஆதிக்கம் உயரும். தடைகள் விலகும். வேலைப்பளு கூடும். அரசியல் லாபம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பல்வலி வந்து நீங்கும். எதிர்பார்ப்புகள் உருவாகும். நண்பர்களை சந்திப்பீர்கள். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். தனலாபம் பெருகும். இடமாற்றம் ஏற்படும். பயணம் தடைப்படும். தாய்வழி உறவு நன்மை தரும். குடும்ப தேவை அதிகரிக்கும். பிள்ளைகளால் மேன்மை உண்டு. மதிநுட்பம் தேவை. ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலம் கூடும். மற்றவர்களால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி தரும். வெளியூர் பயணம் செல்வீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 2,1,4,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,E




**கடகம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும் வாரம். காரியம் வெற்றி தரும். அலைபேசித் தகவல் ஆனந்தம் தரும். உடல்நலனில் அக்கறை தேவை. வெகுமதிகள் உண்டு. வெளிநாட்டுப் பயணம் உண்டு. கனவு பலிதமுண்டு. குடும்பத்தில் அன்யோன்யம் கூடும். கலைத்தொழிலில் ஆர்வம் கூடும். விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. ஆபரணச் சேர்க்கையுண்டு. கவனமுடன் செயல்பட வேண்டும். பொறாமைகள் அகலும். விட்டுக்கொடுத்து செல்ல வேண்டும். அமைதியாக செயல்பட வேண்டும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பொன்னான தருணம். புதிய வாகனம் வாங்குவீர்கள். புது மனை புதுப்பிப்பீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். குடும்ப மனநிறைவு தரும். புதிய நண்பர்களை தவிர்க்கவும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர் நட்பு கிட்டும். குடும்ப கௌரவம் உயரும். திருமண தடைகள் விலகும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பங்குச் சந்தை மாற்றம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். உடல் ஆரோக்கியம் குறையும். பணவிரயம் ஏற்படும். உறவினரால் செலவு உண்டு. கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். மன வேதனை குறையும். எதிர்மறையான எண்ணங்கள் விலகும். வசதிகள் பெருகும். பொருளாதார உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Y




**சிம்மம்:** நல்ல வாய்ப்புக்கள் வரும் வாரம். கடன் பிரச்சனை உருவாகும். கால்நடைகளால் பலன் உண்டு. கலைத்தொழிலில் ஆர்வமுடன் செயல்படுவீர்கள். செயல்திறன் வெளிப்படும். நிர்வாகத் திறன் கூடும். உத்தியோக முன்னேற்றம் ஏற்படும். மங்களச் செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். உறவினர்களின் வருகையால் செலவுகள் அதிகரிக்கும். கடன் குறையும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். பெண்களுக்கு யோகமான காலம். செயல்களில் கவனம் தேவை. அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலை திறன் அதிகரிக்கும்.


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377

சுபக்காரியச் செய்தி வரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன் பிறந்தோரால் உதவி கிடைக்கும். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். உள்ளம் பூரிப்படையும். மனம் மகிழும் நாளாக அமையும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் தேடி வரும். தொலைபேசித் தகவல் நல்ல செய்தி தரும். செல்வாக்கு சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். சேய் நலம் கூடும். நோய் நொடிகள் அகலும். சேமிப்பு உயரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,1,9
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,J




**கன்னி:** உடல் உபாதை விலகும் வாரம். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச்செலவு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் வியாபாரம் லாபம் தரும். வழக்குகள் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். மருத்துவச் செலவு ஏற்படும். பிள்ளைகளால் பெருமை உண்டு. விருந்தினர் வருகை உண்டு. வியாபாரத்தில் நன்மை உண்டு. சாதனைகள் நிகழ்த்தும் நாளாக அமையும். சொத்துப் பிரச்சனைகள் தீரும். அரசு வழியில் ஆதாயம் தரும். கடன்சுமை தீரும். நன்மைகள் பெருகும். கூட்டுத்தொழில் லாபம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. கனவுத்தொல்லை உண்டு. ஏற்றுமதி தொழிலில் முன்னேற்றம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. தனவரவில் தாமதம் உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. மேலதிகாரியின் ஆதரவு உண்டு. கல்வியில் ஏற்றம் உண்டு. கவலைகள் குறையும். உடல்நலத்தில் அக்கறை தேவை. பெரியோர்கள் ஆசி கிடைக்கும். வீண் பேச்சை தவிர்க்கவும். தனம் சேரும் காலம். கடன் பிரச்சனை தீரும். வியாபார வாய்ப்பு உண்டு. புத்திரர் வழியில் தொல்லை உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வீண் வம்பு ஓடி மறையும். வாழ்க்கை வசதி பெருகும். வேலை பளு அதிகரிக்கும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கோதுமை தானம் குல விருத்தியை சேர்க்கும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,L




**துலாம்:** உள்ளத்தில் கவலைகள் விலகும் வாரம். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். நல்வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். வில்லங்கம் விலகும். போட்டிகள் மறையும். தொல்லைகள் அகலும். இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. விவசாய விளைச்சல் மூலம் நற்பலன் உண்டாகும். புதிய சிந்தனை உருவாகும். போட்டி பொறாமைகள் மறையும். பூமியால் லாபம் உண்டாகும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. உடல்நலம் சீராகும். இனிய தகவல் வந்து சேரும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். பொருள் நஷ்டம் ஏற்படும். வேலைப்பளு கூடும். நிதானம் தேவை. அரசியல் ஆதாயம் உண்டு. குடும்ப சச்சரவு ஏற்படும். சங்கடம் அதிகமாகும். வருமான வரி தொல்லை ஏற்படும். விரோதம் விலகும். படிப்பில் ஆர்வம் கூடும். சந்தோஷமான நாளாக அமையும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. உடல் நலம் சீராகும். புஷ்ப வழிபாடு புண்ணியம் சேர்க்கும். வசந்தம் தேடி வரும். நற்பலன்கள் கிடைக்கும். குதூகலம் அதிகரிக்கும். ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. நிம்மதியான குடும்ப வாழ்க்கை அமையும். இனிதான காரியம் நடைபெறும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். கணவன், மனைவி உறவு மேம்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: எமதர்ம ராஜா, அதிர்ஷ்ட எண்: 4,2,3,5
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P




**விருச்சிகம்:** வெற்றி கிட்டும் வாரம். நற்செய்தி நாடி வரும். தொழில் வாய்ப்பு கூடி வரும். தடைகள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். விருப்பங்கள் நிறைவேறும். வீண் செலவுகள் அதிகமாகும். புதிய பொறுப்பு வரும். அரசியலில் ஆதாயம் உண்டு. திறமைகள் அதிகமாகும். பயணம் லாபம் தரும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. கலையில் ஆர்வம் பெருகும். நண்பர்களை சந்திப்பீர்கள். தாயின் நலனில் அக்கறை தேவை. பிரச்சனைகள் விடுபடும். புதிய முயற்சி பலன் தரும். நினைத்த காரியம் நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து உயரும். இனிய எண்ணம் உதயமாகும். அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத்தன்மை கூடும். பொன், பொருள் சேரும். மாலைநேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். நினைத்ததை சாதிக்கும் காலம். உற்சாகம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. திடீர் செலவு ஏற்படும். மங்களச்செய்தியால் மனம் மகிழும். பிள்ளைகளால் பெருமை சேரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆலோசனை பூர்த்தியாகும். அணிகலன் ஆர்வம் கூடும். பங்குச்சந்தையில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,4,5,6
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K




**தனுசு:** மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும் வாரம். தன்னம்பிக்கை கூடும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். குடும்ப கௌரவம் உயரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். தோஷங்கள் ஒதுங்கும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் உண்டு. பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். தெம்பும், தைரியமும் கூடும். மங்கையருக்கு திருமண பாக்கியம் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்ட காலம் மறையும். ஜீவராசிகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். மன அமைதி சீர் குலையும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பொறாமைகள் விலகும். சிறப்புக்கள் சேரும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X

**(தொடர்ச்சி 25 பக்கம்)**

# திமுக அரசு வெளியிட்டுள்ள நிதிநிலை அறிக்கை மக்களை ஏமாற்றும் கவர்ச்சிகரமான அறிவிப்புகளை மட்டுமே கொண்டது — நாம் தமிழர் சீமான் கருத்து



கவர்ச்சிகரமான அறிவிப்புகளை மட்டுமே கொண்டதும் மக்களை ஏமாற்றியதுமான நிதிநிலை அறிக்கையே திமுக அரசு வெளியிட்டுள்ளத - நாம் தமிழர் கட்சி சீமான் கருத்து நாம் தமிழர் கட்சி

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

திமுக அரசால் வெளியிடப்பட்டுள்ள 2023 -24ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையானது வெற்று அறிவிப்புகளை மட்டுமே கொண்டு, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வழிவகை செய்யாத வகையில் அமைந்திருப்பது பெரும் ஏமாற்றத்தைத் தருகிறது.

குடும்ப அட்டை வைத்திருக்கும் குடும்பத்தலைவிகள் அனைவருக்கும் 1000 ரூபாய் உரிமைத்தொகை வழங்கப்படுமெனத் தேர்தல் அறிக்கையில் கூறிவிட்டு, இப்போது தகுதிவாய்ந்த குடும்பத்தலைவிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு மட்டுமே உரிமைத்தொகையை வழங்குவோம் என அறிவித்திருப்பது அப்பட்டமான மோசடித்தனமாகும்.

கடந்த நிதியாண்டில், 45,000 கோடி ரூபாய் மதுக்கடைகளின் மூலம் வருமானம் கிடைத்துள்ளதெனக் கூறி, அதனை 50,000 கோடி ரூபாயாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பது வெட்கக்கேடானது. பெரும் பெரும் பொருளாதார நிபுணர்களைக் கொண்ட குழுவை அமைத்த திமுக அரசு, அவர்கள் மூலம் மாற்றுப்பொருளாதாரப் பெருக்கத்திற்கான வழிவாய்ப்புகளைத் தேடாது, மதுக்கடைகளையே வருவாய்க்கான முதன்மை வாய்ப்பாகக் கொண்டிருப்பது மிக மோசமான நிர்வாகச் செயல்பாடாகும்.

சென்னையில் மொழிப்போர் ஈகியர்களான நடராசன், தாளமுத்துவுக்கு நினைவிடம் அமைக்கப்படுமென அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். அதேசமயம், தாளமுத்து, நடராசன் ஆகிய இருவரது நினைவு நாள் நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கிற வேளையில், மொழிப்போர் எழுச்சியைக் கொண்டு அதிகாரத்திற்கு வந்த திமுக, இப்போதுதான் அவர்களுக்கு நினைவிடம் கட்ட முற்படுகிறதென்பது வரலாற்றுப்பேரவலமாகும்.

மாதந்தோறும் மின்கணக்கீடு செய்யப்பட்டு, மின்கட்டணம் செலுத்துவது தொடர்பாக நிதிநிலை அறிக்கையில் எந்தவித அறிவிப்புமில்லை. அதனைப் போல, அரசு ஊழியர்கள், ஆசிரியப் பெருமக்களுக்குப் பழைய ஓய்வூதியத்திட்டம் மீண்டும் கொண்டு வரப்படுமென தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதி குறித்தும் நிதிநிலை அறிக்கையில் எதுவும் இடம்பெறவில்லை.

ஆதித்திராவிடர், பழங்குடி, மலைவாழ் மக்கள் நலனுக்கு கடந்தாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி 5,090 கோடியாக இருந்த நிலையில், தற்போது அது 3,500 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் பல்வேறு துறைகளின் பள்ளிகள் அனைத்தும், பள்ளிக்கல்வித்துறையின் கீழ் கொண்டுவரப்படும் என அறிவிக்கப்பட்டிருப்பது மாணவர்களது நலன் குறித்தும், ஆசிரியர்களது பணி குறித்தும் கல்வியாளர்கள், ஆசிரியப்பெருமக்கள் இடையே பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

தற்போதைய நிதிநிலை அறிக்கையில், நிதிப்பற்றாக்குறை குறைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும், மாநிலத்தின் கடன் சுமை ஒரு இலட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. இத்தோடு, போக்குவரத்துக்கென்று புதிய பேருந்துகள் வாங்குவது உள்ளிட்ட கடந்தாண்டு அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் செயல்படுத்தப்படவில்லை.

மொத்தத்தில், கவர்ச்சிகரமான அறிவிப்புகளை மட்டுமே கொண்ட வழமையான நிதிநிலை அறிக்கையாக இருக்கிறதே ஒழிய, மக்கள் நலனையும், அவர்களது வாழ்வியல் மேம்பாட்டையும் முன்வைக்கிற திட்டங்கள் எதுவுமில்லை என 2023- 24ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மதிப்பிடுகிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வலைதளம்: https://www.naamtamilar.org/

## இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**மகரம்:** கர்ஜனையோடு வலம் வரும் வாரம். உற்சாகம் அலைமோதும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். காரியத்தடை ஏற்படும். புதிய எண்ணங்கள் உருவாகும். மனநிறைவு உண்டாகும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். வெற்றியை எட்டும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும் முடிவுகளில் தெளிவு இருக்கும். செயலில் துணிவு கூடும். உடல்நிலையில் அக்கறை தேவை. ஆதாயம் பெருகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பலன் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். கடன் சுமை குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Q




**கும்பம்:** கௌரவம் அதிகரிகக்கும் வாரம். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். காதலர்கள் தம்பதியாவார்கள். விபரீத போக்கு மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பேச்சில் கம்பீரம் இருக்கும். பூர்வீக சொத்து கிடைக்கும். சுபச்செய்திகள் வீடு தேடி வரும். திருமணப் பேச்சு நல்ல தகவல் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் மேன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். பயணம் அனுகூலம் தரும். சாதனைகள் படைக்கும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். நட்பு வட்டம் விரிவடையும். ஆடை, ஆபரணம் சேரும். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சிகள் பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,D



**மீனம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய வாரம். செயல் திறமை வெளிபடும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கம். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புகள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். புத்தி சாதுர்யம் கூடும். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து உண்டு. மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. மங்களச் செய்தி வரும். வெற்றிகள் குவியும். வீண் செலவுகளை தவிர்க்கவும். ஆன்மீகத்தில் ஆர்வம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். அலைச்சல் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். மாணவர்களுக்கு கவனம் தேவை. காதலர்கள் தம்பதியாவார்கள். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் வரும். செல்வாக்கு மேம்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A

## நாமும் நம் செயலும்

**(சக்தி ஞானம்மாவின் ஆன்மீகச் சிந்தனையிலிருந்து)**

### *நற்சிந்தனை........*

பெற்ரோர்களை மதியுங்கள். அவர்களை பெருமையோடு போற்றுங்கள்
உங்கள் வாழ்க்கை சிறப்பா அமையும்.
குடும்பத்தை உள்ளன்போடு நேசிப்பவர் மட்டுமே
நாட்டையும் நேசிப்பர். இதை நான் மனப்பூர்வமாகச் சிலரைப் பார்த்தும் இருக்கின்றேன்.
உழைப்பே உயர்வு தரும். உழைப்போம் உயர்வோம். உழைப்போர் உயர்ந்தோர். வன்முறைதான் போராட்டம். என்றால், தோல்விதான் அதற்குப் பரிசாக கிடைக்கும் என்பது நிச்சயம்.
சமத்துவ சமுதாயம் காண்பதே உழைக்கும் வார்க்கத்தின் உண்மையான இலட்சியம் என்ற கருத்துக்கு முதலிம் தாருங்கள். சுயநலமில்லாத நம்பிக்கை வெற்றிபெறும்.
நாம் யாரும் கடவுளைக் கண்டதில்லை. அதனால் நம் கண்கண்ட தெய்வம் தாய், தந்தை என்றுதான் கூறுகின்றோம்
புகழ் என்பது பிறர் கொடுக்கும் தானம் போன்றதே!
அது நமக்கு சொந்தமானதல்ல
ஒருவர் மறைந்த பின்னரும் இருக்கும் புகழ்தான் நிலையானதும், சொந்தமானதும.

உன்னை நம்புகின்றோம். அனால் உனது செயல்தான் அந்த நம்பிக்கைக்கு எதிர்மறையாக இருக்கின்றன. நான் ஒருவனின் செயலைக் கண்டு அவனை யார் எனக்கண்டு. சாதாரணமானவனாக இருந்தால் அவனைத் தவறான ஆள் என்று முடிவு செய்து இருப்பேன். ஆனால் நான் அப்படி அல்ல. அவனது செயலுக்கு யார் காரணம்? அவன் தான் காரணம். அதனால் அந்தச் செயலுக்கு அவனிடம் விளக்கம் கேட்கின்றேன்.
அவனது பதில் அவனது செயலோடு ஒத்துப்போகுமாயின் எந்த ஒரு பிரச்சனையும் இல்லை. ஆனால் அவனது செயலும், அவனும் மாறுபாடாய் இருக்கின்ற போது எதை நம்புவது. அவனையா? அவனது செயலையா அவனது செயலுக்கு அவன்தான் பொறுப்பு. ஆனால் அதை அவன் மறுக்கின்றான். அவனால் முடியாத போது தீர்ப்பு வழங்குகின்றவர்களை எதிரியாக பார்க்கின்றான்.
உனக்குள்தான் எல்லாம் இருக்கின்றது.
பிரகலாதன் சொன்னமாதிரி இறைவன். தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் எந்த ரூபத்திலும் இருப்பான். அதை நீ கண்டுபடிக்க வேண்டுமென்றால் உன்னை நீ பக்குவபடுத்து. யார் எதுசொன்னாலும், இறைவன் மேல் பெறுப்பைக்கொடு. நீ மௌனமாக இரு. அதில் வெற்றி காண்பாய்.
ஓடி, ஓடி உழைக்கவும்
ஊருக்கெல்லாம் கொடுக்கணும். ஏழைகளை அன்பாய் பார்க்கணும்.
நல்லோரை காண்பதும் நன்றே
நல்லார் குணம் கேட்பதும் நன்றே!

# கடந்தவையும் கடப்பவையும் (51)

தொடரும் பாதைவழி தொடராக
மலரும் நினைவுகளே தொடர

ஆலயத்தின் அருகிருக்கும் - அன்று
போகவிரும்பாப் பள்ளியது செய்த

பெரும் உதவி க.பொ.த சாதாரணம் - இன்று
வரும் நாளை வரும் பரீட்சையென

சோதனைக் காலமான எண்பத்தியேழில் - பல
வேதனைகளோடுஅச் சோதனையும்

தாமதமாகவேனும் நடந்தே முடிந்தது - உயர்
தரத்திற்கு உயர்ந்தே செல்லப் புள்ளிகளைப் பெற்றிடினும் - கிழமையில்

மூன்று நாளேனும் முழுமையாய்ப் போவதில்லைப் பள்ளிக்கு - ஆனாலும்
அன்றைய யாழ்ப்பாணப் பெற்றோர் மாறவில்லை

எட்டுப் பாடத்திலும் அதியுயர் சித்தி - அதை
பெற்ற பிள்ளைதான் பிள்ளை - மற்றவர்கள்?

கடந்தகாலக் கணங்களையும் றணங்களையும்
மறந்தவராய் தினம் தினம் திட்டினார்கள் - அதுவும்

'அப்ப நீ அப்பாவைப்போல் படிக்காயோ?' என
நக்கலாக் கேட்பார் ஆச்சியும் தான்

எப்படிப்புப் படித்தும் உயர்ந்திடலாம் என்பது - அங்கு
இப்பவும் தான் விளங்கவில்லை சிலருக்கு

வைத்தியற்கோ அன்றி பொறியியலாளருக்கோ பிள்ளையாய்
பிறந்துவிட்டால் - அவற்கு
பைத்தியம் பிடிப்பதற்கு வாய்ப்பு அதிகம் - அங்கு

பெறுபேற்றைக் கேட்பதற்கும் கிண்டல் அடிப்பதற்கும்
ஒரு கூட்டம் திரியும் வீடுவீடாய்

பெரியப்பா சித்தப்பா கூட விடமாட்டார்
வருகிதோ இல்லையோ அவருக்காக ஏனும் - மூளைக்கு

வராதபாடத்திலும் வலுக் கட்டாயமாய்ப் போயிருந்து
ஆராரிடமோ எல்லாம் அசிங்கப்பட்டதுண்டு - இதையின்று

வாசல்வரை வளர்ந்த அந்தப் பாடசாலையைப் பார்த்து
நேசமுடன் நினைவில் வந்தவற்றை நினைந்தபடி நகருகிறோம்

இடப்பக்கக் கடலின் அழகை இரசித்தபடி -
வலப்பக்க இடுகாட்டை இடைக்கிடை பார்த்தபடி...

(தொடரும்)

-- உமா மோகன் - Montreal- Canada --








24 மணி நேர
தமிழ் வானொலி
Toronto
24 Hours Tamil Radio
தாளம்
FM 88.9 HD3
Serving GTA & Beyond
416-441-4100
thaalamfmhd
Thaalam FM
www.thaalam.fm
FM 88.9 HD3 அலைவரிசையில் GTA தாண்டியும் துல்லியமாக ஒலிக்கிறது 24 மணி நேர தமிழ் வானொலி தாளம்.
FM 105.9 அலைவரிசையில் மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை ஒலிக்கிறது தாளம் தமிழ்.
தாளம் தமிழ்
FM 105.9
6:00pm to 6:00am

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas, Broker
Sun Sanmugathas, Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930
5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895
3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1407 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 24, 2023

# "காசு இல்ல கடன் தான் இருக்கு!" என்று கைவிரித்த தமிழ்நாட்டு நிதியமைச்சர் தியாகராஜன்



கடன் சுமை அதிகரித்துள்ளதால், இப்போதைக்கு புது திட்டங்கள் குறித்து, சட்டசபையில் கோரிக்கை விடுக்க வேண்டாம்" என, தி.மு.க., - எம்.எல்.ஏ.,க்கள் கூட்டத்தில், நிதியமைச்சர் தியாகராஜன் கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது. சட்டசபை பட்ஜெட் கூட்டத் தொடர் துவங்கியுள்ளதை ஒட்டி, தி.மு.க., - எம்.எல்.ஏ.,க்கள் கூட்டம், அக்கட்சியின் தலைமை அலுவலகமான அறிவாலயத்தில், நேற்று முன்தினம் நடந்தது.
(உள்ளே 3ம் பக்கத்தில் தொடர்ச்சி)

# கனடா ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பின் அனுசரனையில் இலங்கையில் கிழக்கில் நடைபெறும் இரத்த தான முகாம்

கனடா-ரொறன்ரோ பெரும்பாகத்தைத் தளமாகக் கொண்டியங்கும் **TORONTO VOICE OF HUMANITY** அமைப்பின் அனுசரனையில் இலங்கையின் கிழக்குக் கிராமமொன்றில் இடம்பெறும் சமூகம் சார்ந்த நிகழ்வு- இரத்த தான முகாமும் தொண்டர்களை கௌரவித்தலும் நடைபெறவுள்ளது. விபரங்களுக்கு 18ம் பக்கம் உள்ள அறிவிப்பைப் பார்க்கவும்.

# ஈற்றோபிக்கோவில் இயங்கிவரும் "கிராமத்து வதனம்" அமைப்பினரால் கொண்டாடப்பெற்ற "உலக மகளிர் தினம் — 2023





எழுத்தாளரும் தமிழாசிரியையுமான திருமதி கமலவதனாவின் தலைமையில் ஈற்றோபிக்கோ நகரில் இயங்கிவரும் "கிராமத்து வதனம்" அமைப்பினரால் கொண்டாடப்பெற்ற "உலக மகளிர் தினம்-2023 கடந்த 19-03-2023 ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் ஈற்றோபிக்கோ நகரில் அமைந்தள்ள சனசமூக நிலைய மண்டபத்தில் சிறப்பக நடைபெற்றது.
பிரதம விருந்தினராக பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்.
சிறப்பு விருந்தினராக முன்னாள் தமிழ் மூத்தோர் சங்கத்தின் தலைவரும் சமூக சேவையாளருமான கரு நவரட்ணராஜா அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்.
(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில்)

# கனடிய அரசியிலில் சீனாவின் தலையீடு என்ற குற்றச்சாட்டில் ஆளும் கட்சியைவிட்டு வெளியேறி சுயேட்சையாக அமர்ந்து கொண்ட எம்.பி ஹான் டாங்

அண்மையில் சில மாதங்களாக கனடாவில் மிகவும் தீவிரமாக விமர்சிக்கப்பட்டு வந்த 'கனடிய அரசியலில் சீனாவின் தலையீடு' என்னும் விவகாரம் காரணமாக ரொறன்ரோவின் டான்-வெலி தொகுதி- வடக்கின் பாராளுமன்ற உறுப்பினர் ஹான் டோங் கடந்த புதன்கிழமை பிற்பகுதியில் ஆளும் லிபரல் அணியிலிருந்து வெளியேறி, சுயேச்சை உறுப்பினர்கள் அமரும் இடத்தில் அமர்ந்து கொண்டார் என்ற செய்தி வெளியாகியுள்ளது.



தன் மீது சுமத்தப்பட் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் அரசாங்கத்தின் பணிகளுக்கு இடையூறாக இருக்க விரும்பவில்லை என்று கூறிய வண்ணம் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமரும் பகுதியிலிருந்து வெளியேறி சுயேட்சையாக அமர்வதற்கான தனது முடிவை பிரதமரிடம் முன்னதாகவே தெரிவித்ததாக அவர் கூறினார்.

# கனடா தமிழ்க் கவிஞர் கழகம் நடத்தவுள்ள 'யாப்பிலக்கண வகுப்புக்கள்'

கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் 'தமிழ்க் கவிஞர் கழகம்' நடத்தவுள்ள "யாப்பிலக்கண வகுப்புக்கள் எதிர்வரும் 25-03-2023 அன்று ஆரம்பமாகின்றன. ஆர்வமுள்ளவர்கள்

உலகின் எப்பகுதியிலிருந்தும் பங்குபற்றலாம். விபரங்களுக்கு உள்ளே 13ம் பக்கம் உள்ள அறிவித்தலைப் பார்க்கவும்.

# தனது 94வது வயதில் கனடாவில் இறப்பைத் தழுவிய சர்வதேச கவிஞரும் முன்னாள் ஆசிரியருமான ஐயாம்பிள்ளை சங்கரப்பிள்ளை



அமரர். ஐயாம்பிள்ளை சங்கரப்பிள்ளை அவர்கள். யாழ்ப்பாணம் தோப்புரை பிறப்பிடாகவும், கந்தர்மடத்தை வாழ்விடமாகவும் கொண்டவர் யாழ் இந்து கல்லூரி மற்றும் நைஜிறியா ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாறிய அவர் பின்னர் இறுதி வரைகனடா ஸ்காபரோவை வதி விடாமாகக் கொண்டு நீண்ட காலம் இங்கு வாழ்ந்தார்.
அண்மையில் தனது 94வது வயதில் நிறைவான வாழ்லிருந்து கனடா மிசிசாகாவில் இயற்கை எய்தினார். அவரது இறுதிக்கிரியைகள் அங்கு இடம்பெற்றன. கனடா உதயன் நிறுவனமும் அன்னாருக்கு தனது ஆழந்த அஞ்சலியைத் தெரிவிக்கின்றது- அனுதாபம் தெரிவிக்க விரும்புவோர் அவரது புதல்வருடன் 416 712 5598 என்னும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

# மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி தொகுதி அலுவலகம் நாளை நடத்தும் MEET & GREET EVENT

எமது மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் தொகுதி அலுவலகம் சனிக்கிழமை நடத்தும் **MEET AND GREET EVENT.**




புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136